பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 17 ஞாயிற்றுக்கிழமை 03.09.2023 கதிர் 296

# ஜனாதிபதித் தேர்தலை உடன் நடத்த அரசமைப்புத் திருத்தத்துக்குத் தயார்

## ஜே.வி.பி. அறிவிப்பு

உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக அரசமைப்பில் திருத் தங்கள் கொண்டு வரப்படுமாயின் அதற்கு ஆதரவு வழங்குவதற்கு தேசிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தேர்தல்களை நடத்துவதற்கு ஆட்சியாளர்கள் தயங்கி வருகின் றார்கள். ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணையில்லாத தலைவராக சட்டவிரோதமான முறையில் நாட்டை ஆட்சி செய்து வருகிறார்.

நாடு மிகப்பெரியளவில் பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியில் மோசமான நிலைமையை நோக்கிப் பயணித்து வருகின்றது. ஜனாதிபதி தனது அழகான கதைகள் மூலம் கட்டியெழுப்பும் ☞2

## இது ரகசியம் அல்ல!

தர்மன் சண்முகரட்ணம் சிங்கப் பூரின் ஜனாதிபதியாக (அதிபர்) தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார். அவர் யாழ்ப்பாணத் தைப் பூர்வீகமாகக் கொண்ட சிங்கப்பூர்காரர் என்பதில் ஒருவித கொண்டாட்ட மனோ நிலையை - மகிழ்ச்சியை - உற்சாகத்தை இங்கு காண முடிகின்றது.

தர்மன் சண்முகரட்ணம் யாழ்ப்பாண மாவட்டம், ஊரெழுவைப் பூர்வீகமாகக் கொண்டவர் என்பதை இங்குள்ள தமிழ் ஊடகங்கள் முதன்மைப்படுத்தி வெளியிட்டன. சிங்கள ஆங்கில ஊடகங்களில் பலவும் அவரை இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் என்று விளித்தபோதும், தமிழ் ஊடகங்கள் அவர் ஊரெழுக்காரர் என்பதைப் போன்ற விம்பத்தைத் தோற்றுவிக்க முயன்றன.

சிங்கப்பூரில் தர்மன் சண்முகரட்ணம் ஜனாதிபதியாகி இருப்பது யாழ்ப்பாணத் தவர்களுக்கு முக்கியமோ இல்லையோ அங்குள்ள தமிழர்களுக்கு முக்கியமானது. ஏனெனில், தமிழர்கள் சிங்கப்பூரிலும் சிறுபான்மையினரே. சிங்கப்பூரை ☞2

## மத்திய வங்கி ஆளுநருக்கு புதிய கௌரவம்

உலகின் மிகச்சிறந்த மத்திய வங்கி ஆளுநர்கள் 21 பேரில் ஒருவராக, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

குளோப் பினான்ஸ் சஞ்சிகையினால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச தரப்படுத்தலுக்கு அமைய அவருக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு முதல் ☞2

## 77 வகையான மருந்துகளுக்கு நாட்டில் தற்போது தட்டுப்பாடு

நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் தற்போது 77 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அமைச்சின் மேலதிக செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்க வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அவசர கொள்வனவின் ஊடாக 400 வகையான மருந்துகள் தருவிக்கப்பட்டு, வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட 378 வகையான மருந்துகள் இதுவரை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் உலக வங்கியின் உதவியுடன் 23 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 46.7 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன - என்றார்.

## கொழும்பின் மீதான சீன ஆதிக்கம் இந்திய உறவை நிச்சயம் பாதிக்கும்

### தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் கருத்து

(ந.லோகதயாளன்.)

சீனாவைவிட அளவிலும் சனத்தொகையிலும் மிகச் சிறிய நாடாகக் கணப்படும் இலங்கை மீது சீனா வைத்திருக்கும் ஆதிக்கம் அயல்நாடான இந்தியாவின் உறவை நிச்சயம் பாதிக்கும் என்று தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை காரணமாக வைத்து சீனா உதவி என்ற போர்வையில் கடன்களை வழங்கி இலங்கையை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது.

சீனாவின் ஆதிக்கமானது அயல் நாடான இந்தியாவை சீண்டிப் பார்க்கும் ஒரு செயல்பாடாகவே காணப் படுகிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பொருளாதார கலாச்சார மற்றும் சமூக ரீதியான நீண்ட வரலாற்றைக் கொண்ட தொடர்புகள் ☞2

## வடக்கு தென்னை முக்கோண வலய தொடக்க விழா நேற்று பளையில்



வடக்கு தென்னை முக்கோண வலயத்தை உருவாக்குவதற்கான தொடக்க நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. இந்த விழாவில் தென்னை வளர்ப்பாளர்கள் கௌரவிக் கப்பட்டார்கள்.

பளைமாதிரித் தென்னை தோட்டம் பகுதியில் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் அமைச்சர் ராமேஸ் பத்திரன, பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சர் லொஹான் ரத்வத்த, நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் றூபவதி கேதீஸ்வரன், தெங்கு அபிவிருத்தி சபை அதிகாரிகள், தென்னை உற்பத்தியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தென்னை ☞2

## ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி பிரதமருடன் சந்திப்பு

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் மார்க் அன்ரே ப்ரன்சியும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் நேற்று அலரிமாளிகையில் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பு தொடர்புல் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளதாவது:

அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் பொருளாதார மீட்சி தொடர்பான விடயங்கள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

உணவு உற்பத்தியை அதிகரிக்கவும், உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யவும் பல நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. நாங்கள் நீண்ட கால அடிப்படையில் ஏற்றுமதியை பல்வகைப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். உணவில் தன்னிறைவு பெறுவது மட்டுமல்லாமல், ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணி வருவாயை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று பிரதமர் தினேஷ் ☞2

## போராடத் தடை

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ள பொரலுகந்த ரஜமகா விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று மனித சங்கிலிப் போராட்டம் ஒன்றுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், இந்தப் போராட் டத்தில் கலந்துகொள்ள சிலருக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

நிலாவெளி பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கமைவாக 14 பேருக்கு எதிராக ☞2

## மேலும் 5 ஆயிரம் வைத்தியர்கள் நாட்டைவிட்டுவெளியேற தயார்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

மேலும் 5000 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான முயற்சியில் இருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் வைத்தியர் விஜயரத்தினசிங்கம் தர்ஷன் யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இருக்கும் வைத்தியர்களில் 95 வீகிதத்துக்கு மேற்பட்டவர்கள் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். ☞2

## வட - கிழக்கில் விகாரை அமைப்பதை எந்தச் சட்டத்தில் தடைசெய்கின்றது?

### சீறுகிறார் பௌத்தசாசன அமைச்சர்

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தமிழர்களுக்காக இந்து ஆலயங்கள் உள்ளன. அவர்கள் அங்கு சென்று சுதந்திரமாக வழிபடுகின்றார்கள். இந்நிலையில், 25 மாவட்டங்களிலும் சிங்களவர்களுக்காகப் பௌத்த விகாரைகள் இருப்பதில் என்ன பிரச்சினை? வடக்கு - கிழக்கில் பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கக்கூடாது என்று எந்தச் சட்டத்தில் உள்ளது?

இவ்வாறு கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளார் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க.

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேசத்தில் 10 கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் 238 சிங்களவர்களுக்கு 23 பௌத்த விகாரைகள் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன. 10 சிங்களவர்களின் வழிபாட்டுக்காகத் தலா ஒரு விகாரை வீதம் அமைக்கப் படவுள்ளது. குச்சவெளி பகுதியில் இந்தப் புதிய விகாரைகளை அமைக்கும் திட்டத்துக்கான அனுமதி கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது என்று கடந்த வாரம் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர ☞2

## கெஹலியவுக்கு எதிரான தீர்மானத்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆதரிக்கும்

### மைத்திரிபால சிறிசேன நேற்று அறிவிப்பு

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆதரிக்கும் என்று அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட விளம்பரங்களை தடுக்க மற்றுமொரு தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கட்சிக்குள் எந்தவித முரண்பாடுகளும் இல்லை, செயலாளர் தயாசிறி ஜயசேகர குருநாகலுக்கு பணிகளைக் கவனிக்கச் சென்றுள்ளார். அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 73 ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுக்கு அழைப்பு விடுக்கவில்லை எனினும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டில் சுகாதாரத் துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு பொறுப்பான அமைச்சரினால் தீர்வுகாண முடியும் ☞2

## பட்டப்பகலில் வியாபாரியை தாக்கிவிட்டு கடத்திய கும்பல்

### கல்வியங்காட்டில் சம்பவம்

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் பழ வியாபாரத்தில் ஈடுபடும் 23 வயதுடைய வியாபாரி, கும்பல் ஒன்றினால் கடத்தப் பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான பிரச்சினையில் வியாபாரி கடத்தப் பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வியாபாரி கடத்தப்பட்டது தொடர்பாக அவரது உறவினர்கள் பொலிஸில் முறைப் பாடு செய்துள்ளனர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து வாகனம் ஒன்றில் வருகைதந்த 12 பேர் கொண்ட கும்பல், வியாபாரியை தாக்கிவிட்டு அவரைக் கடத்திச் சென்றதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக் கப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

கட்டமைத்தவர்களுள் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் கணிசமான பங்குண்டு. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அரச வேலைகளுக்காக யாழ்ப்பாணத் தமிழர்கள் பலர் சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள். அந்த நாட்டின் அடிப்படைக் கட்டமைப்புக்களை உருவாக்குவதில் அவர்களின்பங்குமிகமுக்கியமானதாக இருந்துள்ளது.

தர்மன்சண்முகரட்ணத்தின் தந்தையார் பேராசிரியர் கனகரத்தினம் சண்முகரத் தினம்சிங்கப்பூரின்மருத்துவக் கட்டுமானத்தைப் பலப்படுத் தியவர்களுள் ஒருவர். சிங்கப்பூரில் அவர் நோயியலின்தந்தைஎன்றுஅழைக்கப் படுகிறார். புற்றுநோய் தொடர்பில் அவர் ஆற்றிய பணி அளப்பரியது. பாட்டனார்தான் ஊரெழுவைச் சேர்ந்தவர். சண்முகரட்ணம் சிங்கப்பூரிலேயே பிறந்து அங்கேயே படித்து வளர்ந்தவர். பொருளியல்துறைநிபுணர். லண்டன் பொருளியல் கல்லூரியில் பட்டம் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில்பொருளியல் முதுமானிப் பட்டமும், ஹார்வார்ட் பல்கலைக் கழகத்தில் பொதுப் பணித்துறையில்முதுமானிப்பட்டமும் பெற்றவர்.

சிங்கப்பூரில் இதற்கு முன்னரும் ஒரு தமிழர் ஜனாதிபதியாக இருந்திருக்கிறார். செல்லப்பன் ராமநாதன் (எஸ்.ஆர்.நாதன்) 1990 முதல் 2011 வரை நீண்ட காலம் அந்தப் பதவியை வகித்தார். இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர். தர்மனுக்கும் இவருக்குமான வித்தியாசம், ராமநாதன் போட்டியின்றி ஜனாதிபதியானவர், தர்மன் தேர்தலில் போட்டியிட்டு பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றவர்.

சிங்கப்பூரில் ஜனாதிபதிப் பதவியென்பது ஒரு சம்பிரதாயபூர்வமானதுதான். அங்குநிறைவேற்றுஅதிகாரம் முழுமையாக பிரதமரின் கைகளில்தான்இருக்கின்றது. என்றாலும் 1993 முதல் சிங்கப்பூரின் ஜனாதிபதிகளை மக்கள் நேரடியாக வாக்களித்து தேர்ந்தெடுக்கிறார்கள். இம்முறைதர்மன்70.4சதவீத வாக்குகளை - அதாவது 17 லட்சத்து 46 ஆயிரத்து 427 வாக்குகளைப் பெற்று - வெற்றிபெற்றிருக்கிறார். இந்தவகையில்போட்டியிட்டு அதிக வாக்குகளைப் பெற்று வென்றமுதல்சிறுபான்மைத் தலைவர் என்கிற பெருமை அவருக்குரியது.

அவர் ஒரு யாழப்பாணத் தமிழர்என்றுநாம்கொண்டாடினாலும்அந்தஅடையாளங் களைத் தாண்டி ஒரு சிங்கப் பூர்காரராகத் தன்னை நிலை நிறுத்திக்கொண்டவர்தர்மன். அவர் ஜப்பானிய - சீன வம்சாவழி சட்டவாளரான ஜேன் யுமிக்கோ இட்டோகி என்பவரைத் திருமணம் செய்துள்ளார். அவர்களுக்கு மூன்று ஆண்களும் ஒரு பெண்ணுமாக4குழந்தைகள் உள்ளனர்.

தர்மனைப் பற்றி இவ்வளவுவிவரங்கள்ஏன்சொல்லப் படவேண்டும்என்றுயோசிக் கிறீர்களா? அதற்கொரு காரணம் இருக்கின்றது. தர்மன் சண்முகரத்தினத்தின் வெற்றி சிங்கப்பூர் அரசியல் வட்டாரங்களில் மட்டுமல்ல இலங்கையின் அரசியல் வட்டாரங்களிலும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கிறது. ஏனெனில், வடக்கு மாகாண ஆளுநராகப் பதவி வகித்தவரான ஜீவன் தியாகராஜாவின் நெருங்கிய உறவினர் தர்மன் சண்முகரத்தினம். நெருக்கமானதொடர்புகளைக் கொண்டிருக்கக்கூடிய உறவினர்கள் இருவரும்.

ஜீவன்தியாகராஜாஆளுநராகப் பதவி வகித்தபோது வடக்குக்கும்சிங்கப்பூருக்கும் இடையில் ஒரு உறவை - வர்த்தக, தொழில் ரீதியான தொடர்பை-உருவாக்குவதில் அக்கறைகாட்டிவந்திருந்தார். அப்போதுதர்மன்சிங்கப்பூரில் முக்கியமான அமைச்சராகப் பதவி வகித்தவர். அதனைப் பயன்படுத்திக்கொண்டு வடக்கிற்கும் சிங்கப்பூருக்குமான உறவைக் கட்டியெழுப்புவதில் அவர் அக்கறையோடு செயற்பட்டார்.

இப்போதும்அதேபணியை ஜீவன் தியாகராஜாவைக் கொண்டு செய்விப்பதில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கமுனைப்போடு இருக்கிறார் என்று தெரிவிக் கப்படுகின்றது. அதனால் ஜீவன் தியாகராஜா மீண்டும்வடக்குமாகாணஆளுநர் பதவியிலோ அல்லது வேறு ஏதாவது முக்கியமானபதவியிலோஅமர்த்தப் படலாம் என்று தெரிவிக்கப் படுகின்றது. விரைவிலேயே அது நடக்கும் என்று அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கெஹலியவுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. அதன் காரணமாகவே நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கின்றோம். ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன கட்சி தற்போது பல துண்டுகளாக உடைந்துள்ளது. ஆகவே அதனுடன் கூட்டு சேரும் எண்ணம் எமக்கு இல்லை - என்றார்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரம்மக்களுக்குத் தீயாக மாறி வருகிறது.

மீண்டும்எரிபொருள்விலை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அத்தியவசிய பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. தொழிசார் நிபுணர்கள்தொகை,தொகையாக நாட்டைக் கைவிட்டுச் செல்கின்றனர்.

இந்த நிலைமைகள் தொடர்ந்தால் நாட்டில் இருண்டயுகமேஉருவாகும். ஜனநாயகம் சீர்குலையும். ஆகவே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க விரும்புவாராக இருநதால் அதற்கு உடனடியாக தேர்தலை நடத்தும் சந்தர்ப்பத்தை வழங்க முடியும் - என்றார்.

## ஐ.நா. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணவர்த்த இந்தச்சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அத்தோடு,மூன்றுதசாப்த கால மோதல்களால் பாதிக் கப்பட்ட மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு பல நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன. மோதலின் போது கையகப்படுத்தப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள 95 சதவீதத்துக்கும் அதிகமான காணிகள் உரிமையாளர்களிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளன, விவசாயிகள் தங்கள் நிலங்களில் விவசாயம் செய்யும் வகையில்கண்ணிவெடிகள்அகற்றப் பட்டுள்ளன, விடுதலைப் புலிகள்அமைப்பின்கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் மற்றும் கடற்றொழில் வாழ்வாதாரம் இயல்புநிலைக்குத் திரும்பியுள்ளது.

அத்துடன், இலங்கைக்கு வழங்கிய ஆதரவிற்கு ஐக்கிய நாடுகளுக்கு நன்றிகள். இந்த விடயங்களை வதிவிடப் பிரதிநிதி மேல் மட்டத்திற்கு கொண்டு செல்வார் என்று நம்புகின்றேன் - என்றார் பிரதமர்.

அச்சமயத்தில், இலங்கை சரியான திசையில் பயணிப் பதாகத் தெரிவித்த ஐ.நா.வதிவிப்பிடப்பிரதிநிதி உலகப் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அடுத்த இரண்டு வருடங்கள் இலங்கைக்கு மாத்திரமன்றிபெரும்பாலான நாடுகளுக்கு மிகவும் கடினமானதாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்

பலதசாப்தங்களாகஐ.நா அமைப்பில்சேவையாற்றிய இலங்கையர்களின் பெறுமதியானசேவைகளுக்கு ஐ.நா. பிரதிநிதி இலங்கைக்கு நன்றி தெரிவித்ததோடு, காணாமற்போனோர் அலுவலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் தமது பணிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாகவும், எஞ்சியுள்ள பணிகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

நிலையான அபிவிருத்தி இலக்குகள், பசுமைப் பொருளாதாரம், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் சமூகப்பாதுகாப்புதொடர்பான இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்கள்குறித்தும்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## வட - கிழக்கில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமநாயக்கவிடம் நேற்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார் .

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகள் இருக்கக்கூடாது - புதிதாக நிர்மாணிக்கப்படக் கூடாது என்று யார் சொன்னது? அப்படியாயின் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்களா? வடக்கு - கிழக்கில் மாத்திரம் தமிழர்களுக்குஇந்துஆலயங்கள் அமைக்கப்படவில்லை. நாட்டின்25மாவட்டங்களிலும் தமிழர்களுக்காக இந்து ஆலயங்கள்உள்ளன.சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் இந்து ஆலயங்கள் பெருமளவில் உள்ளன. உதாரணத்துக்குக் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் எத்தனை இந்து ஆலயங்கள்உள்ளன? அங்கு மூலைமுடுக்கெல்லாம்பெரிய, சிறிய இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.இதற்கு எதிராகச்சிங்களபௌத்தர்கள் போர்க்கொடிதூக்கினார்களா? பல இடங்களில் இந்து ஆலயங்களுக்குச் சென்று சிங்கள பௌத்தர்கள் கூட வழிபடுகின்றார்கள்.

தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் ஊடகங்களும் இனவாதத்தை - மதவாதத்தைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதை நிறுத்த வேண்டும்.

இன்று நாட்டு மக்களுக்கிடையில் இனவாத, மதவாதப் பிரச்சினைகள் இல்லை. தமிழ் அரசியல் வாதிகளும், தமிழ் ஊடகங்களும்தான் இப்படியான பிரச்சினைகளைத் தூண்டி விடுகின்றன - என்றார்.

## மத்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த சஞ்சிகையினால் மேற்கொள்ளப்படும்சர்வதேச தரப்படுத்தலில் 101 நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன், பணவீக்க கட்டுப்பாடு, பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்தல், நிதி ஸ்திரத்தன்மை மற்றும் வட்டி வீத முகாமைத்துவம் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, இந்தத் தரப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தத் தரப்படுத்தலில் இந்திய மத்திய வங்கியின் ஆளுநர் ஷக்திகாந்தா தாஸ் முதலிடத்தில் உள்ளதோடு இரண்டாம் இடத்தை சுவிட்ஸர்லாந்தின் தோமஸ் ஜோர்டானும், மூன்றாம் இடத்தை வியட்நாமின் ஹொங்கும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

## மேலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையைப் பொறுத்தவரையில் வைத்தியத்துறை சம்பந்தப்பட்ட பெரும்பான்மையினை நாங்கள் பிரதிபலிக்கின்றோம், இவ்வாறான ஒரு தொழிற்சங்கமாகஇருக்கின்றபடியால் நாங்கள் சுகாதாரத்துறை சம்பந்தமானபிரச்சினைகளில் அக்கறை செலுத்துவதும் அதில் ஏற்படுகின்ற சாதக பாதக நிலைமைகள் பற்றி ஆராய்வதிலும் அக்கறை செலுத்தி வருகின்றோம். அவ்வாறே இந்த மருந்து தட்டுப்பாடு சம்பந்தமாகவும்,புத்திஜீவிகள் வெளியேற்றம் முக்கியமாக வைத்தியர்களுடைய வெளியேற்றம்தொடர்பாகவும் கடந்த காலங்களில் நாங்கள் சுகாதாரத் துறைக்கும் அரசுக்கும் எங்களுடைய முன்மொழிவுகளைவழங்கி இருந்தோம்.

அது உத்தியோகபூர்வமானகூட்டங்களில்பரிசிலிக் கப்படுவதாக கூறப்பட்ட போதும் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை, முதலாவதாக மருந்து மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் தட்டுப்பாடு கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக இது நிலவி வருகின்றது. அதுமட்டுமில்லாமல்தற்போது மருந்தின் தரம் குறையும் தன்மையும் ஆங்காங்கே நிலவி வருகின்றது,

அடுத்துபுத்திஜீவிகள்இந்த நாட்டை விட்டு வெளியேறுவதற்கு பொருளாதார நிலைமையே முக்கிய காரணமாக உள்ளது, அதனால் ஏற்பட்ட வாழ்க்கைச் செலவின அதிகரிப்பும், எதிர்காலம் உறுதியற்ற நிலையும் இதில் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றது. கிட்டத்தட்ட சுகாதார அமைச்சர் தெரிவித்ததின்படி 850 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி இருக்கின்றார்கள் மேலும் ஐயாயிரம் வரையிலான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான முயற்சிகளில் இருக்கின்றமையும் எங்களுக்கு தெரிய வந்திருக்கின்றது.

இவ்வாறுவைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்ற போது ஆளணிப் பற்றாக்குறை ஏற்படப் போகிறது. இவ்வாறு ஆளணி பற்றாக்குறை ஏற்படுகின்ற போது ஒரு நோயாளிக்கு செவிடப்படும் நேரத்தை ஒரு நிமிடத்திள்குள் மட்டுப்படுத்த வேண்டிநேரிடும். நாடிவரும் நோயாளிகள்அனைவருக்கும் சேவையினை வழங்க முடியாத நிலையும் இதனால் ஏற்படலாம். நோயாளிகள் நாட்கணக்கில் காத்திருக்க வேண்டிய தேவையும் ஏற்படலாம். இவ்வாறுகுறுகிய நேரத்துக்கு நோயாளிகளை பார்வையிடுவதால் தரமான சிகிச்சையினை வழங்க முடியாமல் போகலாம்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் என்ற ரீதியில் இந்த ஆபத்துக்களை நாங்கள் முற்கூட்டியே ஆராய்ந்து அரசுக்கு முன்வைக்கின்றோம். அதற்கான தீர்வை அரசு விரைந்து காணவேண்டும். நாட்டிலிருந்து வைத்தியர்கள் வெளியேறுவதை தடுப்பதற்குரிய வழிகளை மேற்கொள்ளவேண்டும் - என்றார்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்கையாளர்களுக்கு ஒரு ஏக்கர் தென்னை செய்கைக்கானதென்னைங் கன்றுகளும், உள்ளீடுகளும் வழங்கப் பட்டன.

"இரண்டு வருடங்களில் 3.5 மில்லியன் தென்னைகளை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதன்மூலம்வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத் தப்படும்" என்று அமைச்சர் தெரிவித்தார்.

தென்னைசெய்கையில் சிறப்பாக ஈடுபட்ட விவசாயிகளுக்கான நினைவுப்பரிசில் களும்வழங்கப்பட்டன. சிறந்த தென்னைச்செய்கையாளர்களுக்கு ரூபா இரண்டுலட்சம் காசோலையும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வின் நினைவானக அமச்சரின் கரங்களால் தென்ங்கன்றும் நாட்டப்பட்டது.

வடக்கு தென்னை முக்கோண வலயத்தை உருவாக்குவதன் அங்குரார்ப் பண நிகழ்வும், சர்வதேச தென்னை விழாவும், தென்னைவளர்ப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை (02) கிளிநொச்சியில்இடம்பெற்றது.

கிளிநொச்சிமாவட்டத்தின் பளை மாதிரி தென்னை தோட்டம் பகுதியில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் ராமேஸ் பத்திரன, பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சர் லொஹான் ரத்வத்த, நாடாளுமன்றஉறுப்பினர் திலீபன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், தெங்கு அபிவிருத்தி சபை அதிகாரிகள், தென்னை உற்பத்தியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, தென்னை செய்கையாளர்களுக்கு ஒரு ஏக்கர் தென்னை செய்கைக் கான தென்னைங்கன்றுகளும், உள்ளீடுகளும் வழங் கப்பட்டது.

இதன் பொது அமைச்சர் ரமேஸ் பத்திரன தெரிவிக் கையில்,

இன்று இரண்டுவருடங் களில் 3.5 மில்லியன் தென்னைகளை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக தெரிவித்தரா். இதன்மூலம்வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தப்படும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில்தென்னை செய்கையில் சிறப்பாக மேற்கொண்ட செய்கையாளர்களிற்கு நினைவுப் பரிசில்களும் வழங்கப் பட்டதுடன்சிறந்ததென்னைச் செய்கையாளர்களுக்கு ரூபா இரண்டு லச்சம் காசோலைகளும் வழங்கப்பட்டது. தொடர்ந்துஇன்றையநாளின் நினைவாக அமச்சரின் கரங்களால் தென்ங்கன்றும் நாட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மேலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை நீதிவான் மன்று இந்தத் தடையுத் தரவைப் பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப் பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இராசமாணிக்கம் சாணக்கியன், செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் இளைஞர் அணித் தலைவர் கிருஷ்ணபிள்ளை பிரசாத், தமிழ்ப்பேரவையின் தலைவர் ஆர்.ஜெரோம், செயலாளர் ரமேஸ் நிக்கலஸ், குச்சவெளி முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் பொன்னையா வைத்தியலிங்கம் மற்றும் பௌத்த பிக்குகள் உள்ளிட்ட 7 பேருக்கும் எதிராக இத் தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**
**076 3983858**
**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# சுத்தமான, சுகாதார பாதுகாப்பு மிக்க குடிநீரை பெற்றுக்கொடுப்பதே இலக்கு

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு





நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகளுக்கும் இடையிலான முக்கிய கலந்துரையாடலொன்று கொழும்பு அமைச்சில் நடைபெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்கை அடிப்படையிலான கடன் திட்டத்தின் கீழ், அரசமறுசீரமைப்பு திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற நிலை குறித்து இதன்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள்முடிவுக்கு கொண்டு வர வேண்டிய காலக்கெடு பற்றியும் அமைச்சர் விவரித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்கைத் திட்டங்கள், இலங்கையின் தற்போதைய நீர்த்துறை மறுசீரமைப்பில் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றது. நீர் முகாமைத்துவம், தடையற்ற நீர் விநியோகம் உள்ளிட்டவற்றை இந்தத் திட்டம் ஊக்குவிப்பதுடன், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளுதல் உள்ளிட்ட மூலோபாய நகர்வுகளையும் திட்டம் உள்ளடக்கியுள்ளது. இலங்கை மக்களுக்கு சுத்தமான, சுகாதார பாதுகாப்பு மிக்க குடிநீரை பெற்றுக்கொடுப்பதே இதன் இலக்காகும். (05)



# வெல்லம்பிட்டியில் ஓட்டோ சாரதி கொலை சந்தேகத்தில் ஆணும் பெண்ணும் கைது


வெல்லம்பிட்டி, கிட்டம்பஹுவ பிரதேசத்தில் ஓட்டோ சாரதி ஒருவரை சுட்டுக்கொலை செய்த சம்பவம் டுபாய் நாட்டில் தலைமறைவாகியுள்ள பாரிய போதைப்பொருள் வியாபாரியான புளுமெண்டல் ரவி என்பவரின் தலைமையில் இடம்பெற்றதாக மேல் மாகாண தெற்கு குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

புளுமெண்டல் ரவியின் போதைப்பொருள் வர்த்தகத்தின் நிதி முகாமையாளரான கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த ஒருவரையும் கொலைக்கு உதவிய குற்றத்துக்காகவும், கொலைக்கு நேரடியாக உதவிய குற்றச்சாட்டில் பெண் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்ததாகக் கூறப்படும் 17 லட்சத்து 59 ஆயிரம் ரூபா, புத்தம் புதிய 9 ஸ்மார்ட் போன்கள், 10 கிராம் ஐஸ் போதைப்பொருள், 21 மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள் ஆகிய-வற்றுடன் லொறிகளுக்கு சொந்தமான 21 வருமான அனுமதிப்பத்திரங்கள், காப்புறுதி சான்றிதழ்கள் மற்றும் பல்வேறு வங்கிப் புத்தகங்களும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. (05)

# சீனாவா இந்தியாவா? என்றால் முன்னுரிமை இந்தியாவுக்கே

## அமைச்சர் டக்ளஸ் பகிரங்கம்



சீனாவா இந்தியாவா எனக்கேட்டால் இந்தியாவிற்கே முன்னுரிமை என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள யாழ்ப்பாண கைத்தொழில் கண்காட்சியில் கலந்து கொண்ட நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் கடற்தொழில் அமைச்சரிடம் கேள்வி கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். சீனக் கப்பல் இலங்கை வருகை தரவுள்ளமை தொடர்பில் இந்த விடயம் ஒரு பேசு பொருளாகவுள்ளது இந்த நிலையில் நீங்கள் சீனாவிற்-கும் இந்தியாவிற்கும் விஜயம் மேற்கொண்டு வந்துள்ளமையால் உங்களின் நிலைப்பாடு என்ன என ஊடகவி-யலாளர்களால் கேட்ட போது -

சீனா, இந்தியா இருநாடுகளும் தேவைதான். ஆனால் எதற்கு முக்கியத்துவம் என்றால் இந்தியாவிற்கே முக்கியத்துவம் தருவேன் என்றார். இதேவேளை -

இந்திய பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வருகை தரவுள்ள நிலையில் அவரிடம் தமிழ் கட்சிகள் கடற்தொழில் பிரச்சினைகள் குறிப்பாக எல்லை தாண்டும் மீனவர்களால் போதைவஸ்து கடத்தல் இடம் பெறுகின்றமை தொடர்பில் கலந்துரையாட வேண்டும் என கடற்தொழிலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளமை தொடர்பில் கேட்ட போது-

போதைவஸ்து கடத்தப்படுகின்றமை தொடர்பில் அதனை கூறியவரிடம்தான் கடத்தல் தொடர்பில் கேட்கவேண்டும். அவர்கள் ஊகங்களுக்கு பதில் கூற என்னால் முடியாது அவர்களிடம்தான் இதனை கேட்க வேண்டும். மேலும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வருகின்றபோது அவருடன் எமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவேன். - என்றார்.

இதேவேளை கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் சீமெந்து தொழிச்சாலை அமைவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதால் அந்த முயற்சிகைவிடப்பட்டுள்ளமை தொடர்பில் கேட்டபோது -

சீமெந்து தொழிற்சாலை அமைவதாயின் அதற்கான விஞ்ஞான ரீதியாலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அங்கு அமைப்பதற்கு ஏற்ற இடம் அடையாளப் படுத்தப்பட்டால் மாத்திரமே அங்கு சிமெந்து தொழிற்சாலை அமைக்கப்படும். ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவிப்பதால் நிறுத்தப்படுகின்ற விடயம் அல்ல. - என்றார். (05)

# யாழ் மத்திய பஸ் நிலையத்தில் 24 மணி நேர சேவை தொடக்கம்

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் வெள்ளிக்கிழமை முதல் 24 மணி நேர சேவையை வழங்கவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்தியத்தின் செயலாற்று முகாமையாளர் லம்பேட்ட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சரும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் 24 மணிநேர சேவையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறு கோரிக்கைக்கு முன்வைக்கப்பட்டது.

அதற்கு அமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் தரப்பினரது கவனத்திற்கு இந்த விடயத்தைக் கொண்டு சென்றதன் அடிப்படையில் குறித்த நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பயணிகள் போக்குவரத்து சேவையில் வெள்ளிக்கிழமை முதல் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் புதிய மைல் கல்லில் அடியெடுத்து வைத்துள்ளது.

கொழும்பு உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்தை யாழ். மாவட்டத்தில் இருந்து மையப்படுத்தி இலங்கை போக்குவரத்து சபை தமது சேவைகளை முன்னெடுத்து வருகின்றது. அவை, பகல் வேளைகளிலும் இரவில் ஆகக் கூடுதலாக 10 மணி வரையிலான காலப்பகுதிக்கான அட்டவணை நிரலின் அடிப்படையில் தமது சேவையை மேற்கொண்டு வந்தது. இந்நிலையில் தற்போது சேவையை 24 மணிநேரமும் மேற்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக நேரக் கணிப்பாளர்கள் மற்றும் ஆளணிகள் குறித்த சேவைக்காக நியமிக்கப்பட்டு, இந்த சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் தூர இடங்களில் இருந்து வரும் பயணிகள் இதுவரை காலமும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்த நிலையில் அதற்கான தீர்வு தற்போது கிடைக்கப் பெற்றுள்ளதுடன் தமது பயணங்களை இலகு-வாகவும் தடைகளின்றியும் மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (05)










# வடக்கு மாகாண உற்பத்திகளுக்கு தெற்கில் சந்தை வாய்ப்பு நிச்சயம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தின் கைத்தொழில் சார்ந்த உற்பத்திகளுக்கு தென்னிலங்கையில் சந்தை வாய்ப்பை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தன்னுடைய முயற்சிகளுக்கு துறைசார் அமைச்சரான மருத்துவர் ரமேஸ் பத்திரன பூரணமான ஒத்துழைப்புக்களை வழங்குவார் எனவும் தெரிவித்தார்.

கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே கடற்றொழில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கைத்தொழில் கண்காட்சி வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமானது. இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஸ் பத்திரன மற்றும் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, யாழ். இந்திய துணைத் தூதுவராலயத்தின் பிரதானி ராகேஸ் நடராஜன் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் வெள்ளிக்கிழமை ஆரம்பமான இக்கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

இலங்கையிலுள்ள 20 தொழிற்சாலைகளில் உள்ள 300 இற்கும் மேற்பட்ட காட்சிகூடங்களில், புத்தாக்கங்கள், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பல புதிய தொழில்கள் மற்றும் வடமாகாணத்துக்கே உரித்தான பல கைத்தொழில்களை யாழ்ப்பாண பதிப்பு தொழில் கண்காட்சியில் காணக்கூடியதாகவுள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சட்டம் ஒழுங்கு துறையை நேர்சீர்ப்படுத்துவது அவசியம்

பணக் கொடுக்கல் வாங்கல்களில் கூலிப் படையினரை அமர்த்தி ஆட்களைக் கடத்துவது தாக்குவது என்று சில கும்பல்கள் அத்துமீறுவது வடக்கில் அதிகரித்திருக்கின்றது. 3 லட்சம் ரூபாய் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்பதற்காக யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் பழ வியாபாரி ஒருவர் இவ்வாறு கடத்தப்பட்டிருப்பதாகக் கோப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. இந்த வகையில் கடைசியாகச் செய்யப்பட்டிருக்கக்கூடிய சம்பவம் இது.

தெற்கில் துப்பாக்கிச் சூட்டுக் கொலைகள் அதிகரித்திருக்கும் நிலையில் வடக்கில் இத்தகைய கூலிப் படையினரின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக வெளிநாட்டில் இருப்பவர்களால் இந்தக் கூலிப் படையினர் பயன்படுத்தப்படுகின்றனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். கட்டப்பஞ்சாயத்து, மீற்றர் வட்டி வசூலிப்பு என்று பல்வேறு வழிகளிலும் இந்தக் கூலிப் படையினர் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்தக் கூலிப் படையினரைப் பயன்படுத்திப் பல கொலைகளும் இடம்பெற்றுள்ளன.

இவை எல்லாம் நாட்டின் சட்டம் ஒழுங்கு மீதும் அதனைச் செயற்படுத்தும் காவல்துறையினர் மீதும் மக்கள் நம்பிக்கையிழந்துவிட்டதையே தெளிவாகக் காட்டுகின்றது. காவல் நிலையங்களில் அளிக்கப்படும் முறைப்பாடுகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை, துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படாமை என்பன காரணமாகவே கூலிப் படையினரை அமர்த்தி இவ்வாறான பணிகளை முடிப்பதற்கு உத்தேசிக்கிறார்கள். இது எதிர்காலத்தில் பேராபத்தை ஏற்படுத்தும்.

தெற்கில் நடக்கும் தொடர் துப்பாக்கிச் சூட்டுக் கொலைகளுக்கு போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டும் பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான மோதல்களே காரணம் என்று காவல்துறையினர் கூறுகின்றனர். ஆனால், இந்தக் குழுக்கள் ஏகே – 47 போன்ற தானியங்கித் துப்பாக்கிகளையும் இப்போது பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இது பெரும் வன்முறைக் கலாசாரத்தை நாட்டில் தோற்றுவித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் காவல்துறையினர் தெரிவித்தாலும் சூடுகளின் எண்ணிக்கை குறைந்தபாடில்லை.

கொலைகளுக்குக் காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்தி தண்டிப்பதற்குப் பதிலாக கொலையாளிகளைத் தேடிக் கொல்லும் பழிக்குப் பழிச் சம்பவங்களும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. குற்றவாளிகளை நீதிமன்றங்களில் அடையாளப்படுத்துவதற்குப் பதில், அவர்களைப் பிணையில் வெளியேறவிட்டுப் பின்னர் தாமே அவரைக் கொல்லும் பழிவாங்கல்களில் ஈடுபடுவோரும் சட்டம் ஒழுங்கு மீதான நம்பிக்கையீனத்தையே வெளிப்படுத்துகின்றனர்.

சட்டம் ஒழுங்கைப் பேணுபவர்களான காவல் துறையினர் நேர்மையாகவும், அர்ப்பணிப்போடும் செயற்படாதபோது, அவர்கள் மத்தியில் ஊழல் மலிந்து காணப்படும்போது வன்முறைகள் பெருகுவதும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவதும் நிகழக்கூடியவைதான். இலங்கை அத்தகைய இக்கட்டுக்குள் இப்போது சிக்கிக்கொண்டுள்ளது. இதனைச் சீர் செய்ய காவல்துறையை முழுமையாக சீரமைப்பது – மீட்டுருவாக்கம் செய்வது – மிக முக்கியமானது. அப்படியில்லையேல் இந்தக் குற்றங்களைத் தடுக்க முடியாது.

எனவே உடனடியாக இதுவிடயத்தில் அரசு அக்கறை செலுத்தி சட்டம் ஒழுங்குத் துறையை நேர் சீர்ப்படுத்துவது அவசியம்.



## சீனக் கப்பல்களின் வருகையும் அரசியல்வாதிகளின் பாசாங்கும்

உபுல் யோசப் பெர்னான்டோ

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் 2014 செப்டெம்பர் மாதம் இலங்கைக்கு வருகை தந்தபோது அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பல உடன்படிக்கைகளை மேற்கொண்டு கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டார்.

21ஆம் நூற்றாண்டின் கடல்சார் பட்டுப் பாதையை அமைப்பதற்காக சீனா முன்வைத்துள்ள முன்மொழிவை இலங்கை வரவேற்று ஆதரிக்கிறது, அது, இந்த முயற்சியில் தீவிரமாக பங்கேற்று ஒத்துழைக்கிறது. மாகம்புர/அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டத்தில் முதலீட்டை மேலும் ஊக்குவிக்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை நிர்மாணிப்பதற்கும் இரு தரப்பும் ஒப்புக்கொண்டன. மாகம்புர/ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் (கட்டம் II) செயற்பாடு தொடர்பான ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கையெழுத்திட்டனர், மேலும் கடல் கண்காணிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட ஒத்துழைப்புக்கான பகுதிகளின் சாத்தியக்கூறுகளை ஆராய்தல், கடல் மற்றும் கடலோர பிராந்திய முகாமைத்துவம், மற்றும் ஷெங் ஹீ (Zheng He) கப்பலின் சிதைவுகளைத் தேடுதல் ஆகியவற்றுக்காக. கடலோர மற்றும் கடல்சார் ஒத்துழைப்புக்கான கூட்டுக் குழு நிறுவப்படும்.

அந்தக் கூட்டறிக்கையின் சில பகுதிகளில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.


இலங்கைக் கடற்கரையில் கடற்படையினர், கடல் பாதுகாப்பு, கடற்கொள்ளையர்களை எதிர்த்துப் போராடுவது, தேடுதல் மற்றும் மீட்பு மற்றும் கடல்வழிப் பாதுகாப்பு ஆகியன தொடர்பிலும் சீன அதிபர் கருத்துத் தெரிவித்திருந்தார். .

அந்தச்சமயத்தில், சீன அட்மிரல் ஜெங் ஹி கப்பலின் சிதைந்த பாகங்களைத் தேடுவதில் சீன அதிபரின் ஆர்வத்தை யாரும் கவனிக்கவில்லை. அதன் பிறகு, இந்த அட்மிரலின் சிதைந்த கப்பலைத் தேடுவதற்காக சீனா இலங்கைக்கு ஆராய்ச்சிக் கப்பல்களை அனுப்பத் தொடங்கியது. கடல் ஆராய்ச்சிக்காகவும், சீனா குறிப்பிடுவது போல அட்மிரல் கப்பலைத் தேடவும் வரும் சீனக் கப்பலுக்கு இலங்கை அனுமதிகளையும் வழங்கியது.

சீன அட்மிரல் ஜெங் ஒரு முஸ்லீம் குடும்பத்தில் பிறந்தவர். பின்னர் அவர் தனது பெயரை மாற்றினார். அவர் தேடிய திரவியங்கள் பலவற்றுடனும் அவரது கடற்படைக் கப்பல் 1410-1411இல் இலங்கைக்கு வந்தது. போர்த்துக்கீசியர்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்பே அவர் இலங்கைக்கு வந்தார். அவர் வரும்போது அழகேஸ்வரா இலங்கையை ஆண்டுகொண்டிருந்தார். தென்னிந்தியக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் இங்கு வந்து இலங்கை அரசர்களின் நம்பிக்கையைப் பெற்றவர். இவரது குடும்ப உறுப்பினர்கள் இலங்கை அரசர்களின் கீழ் அமைச்சர் பதவிகளை அவ்வப்போது வகித்துள்ளனர். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த வீர அழகேஸ்வரா பின்னர் கோட்டே இராச்சியத்தின் ஆட்சியாளரானார்.

சீன அட்மிரல் இலங்கைக்கு வந்தபோது, அழகேஸ்வரா சீன அட்மிரலையும் அவனது படையையும் ஏமாற்றி கோட்டே இராச்சியத்திற்குள் நுழைந்து அங்கு அவரைச் சுற்றி வளைத்தார்.

சீன அட்மிரலின் கப்பலின் மீது திடீர் தாக்குதல் நடத்துவது அழகேஸ்வராவின் திட்டம். இதனால் கோபமடைந்த சீன அட்மிரல் கோட்டே ராஜ்ஜியத்தை கைப்பற்றி அழகேஸ்வரரையும் அவரது குடும்பத்தினரையும் கைது செய்தார். அழகேஸ்வராவின் தலைமையில் போரிட்ட சிங்கள இராணுவம் சீன அட்மிரலிடம் சரணடைந்தது. இந்தப் போர் மிங்-கோட்டே போர் என்று அழைக்கப்படுகிறது.



சீன அட்மிரல் பின்னர் வீர அழகேஸ்வராவை சீனாவிற்குக் கொண்டு சென்றார், மேலும் சீனப் பேரரசர் மூலமாக ஆறாம் பராக்கிரம பாகுவுடன் கூட்டுச் சேர்ந்து அவரை கோட்டே இராச்சியத்தின் ஆட்சியாளராக்கினார், வீர அழகேஸ்வராவின் ஆட்சியைத் தூக்கியெறிந்தார். ஆறாம் பராக்கிரமபாகு மன்னரானதும், சீனா இலங்கைக்கு திரவியங்கள் அடங்கிய கப்பல்களை அனுப்பத் தொடங்கியது.

சீன அட்மிரல் ஜெங், ஒரு படையெடுப்பாளர். சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் இலங்கைக்கு வந்தபோது, ஜெங்கின் உடைந்த கப்பலது சிதைவுகளைக் கண்டுபிடிப்பதில்தான் ஆர்வம் காட்டினார் ஆனால், அதன் பின்னால் வேறு ஏதேனும் காரணங்கள் மறைந்திருக்கலாம். அதற்காகவே சீன அதிபர் ஆய்வுக் கப்பல்களை இலங்கைக்கு அனுப்புகிறார். அந்தக் கப்பல்களை உளவுக் கப்பல்கள் என்று இந்தியா அழைக்கிறது.

2003இல், அப்போதைய பிரதமர் ரணில் ஐ.நா. பொதுச் சபையில் போர்த்துக்கல் பிரதமரைச் சந்தித்து, 2005இல் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்திறங்கிய 500ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாட இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி மற்றும் இடதுசாரிகள் பேன்ற எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் ஆக்கிரமிப்பாளர்களின் வருகையை கொண்டாடுவது நாட்டிற்கு அவமானம் என்று கூறி இதற்கு எதிர்ப்பு தெரிவித்தன.

சீன ஆக்கிரமிப்பாளர் அட்மிரலின் கப்பலைத் தேடி சீனக் கப்பல்கள் வர அனுமதிப்பதும் அதேபோன்று மிகவும் அவமானகரமானது. ஆனால் அதுபற்றி அவர்கள் மௌனம் சாதிப்பது அவர்களின் பாசாங்குத்தனத்தை காட்டுகிறது.



**21ஆம் நூற்றாண்டின் கடல் சார் பட்டுப் பாதையை அமைப்பதற்காக சீனா முன்வைத்துள்ள முன்மொழிவை இலங்கை வரவேற்று ஆதரிக்கிறது, அது, இந்த முயற்சியில் தீவிரமாக பங்கேற்று ஒத்துழைக்கிறது. மாகம்புர/அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டத்தில் முதலீட்டை மேலும் ஊக்குவிக்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை நிர்மாணிப்பதற்கும் இரு தரப்பும் ஒப்புக்கொண்டன. மாகம்புர/ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் (கட்டம் II) செயற்பாடு தொடர்பான ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கையெழுத்திட்டனர்**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
Online booking
30%
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup
Fruit Salad
BEVERAGES
Milk Drink
Pepsi
Coca Cola Tin
SPECIAL MENU PACKAGE

காலைக்கதிர் Kalaikkathir

# பல்பரிமாணத் தாக்கங்களினால் பெரிதும் நலிவுற்றநிலையில் 12.34 மில்லியன் மக்கள்

## ஆய்வில் தகவல்

இலங்கையின் பல்பரிமாணப் பாதிப்புச் சுட்டெண் 0.206 ஆகக் கணிப்பீடு மொத்த சனத்தொகையில் 55.7 சதவீதமானோர் நலிவுற்றநிலையில் உள்ளனர்.

உயர் பாதிப்புக்கள் புத்தளத்திலும் குறைந்தளவு பாதிப்புக்கள் மாத்தளையிலும் பதிவு. பெரும்பான்மையானோரை நலிவடையச்செய்திருக்கும் காரணியாகக் கடன்சுமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் கல்வி, சுகாதாரம், இயற்கை அனர்த்தம் மற்றும் வாழ்வாதார நெருக்கடி போன்ற பல்பரிமாணத் தாக்கங்களின் விளைவாக நாட்டின் மொத்த சனத்தொகையில் 12.34 மில்லியன் பேர் நலிவுற்றிருப்பதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வறுமை, அபிவிருத்தி முன்முயற்சி ஆகியவற்றின்புதியஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின்வறுமைமற்றும் மனிதஅபிவிருத்திமுன்முயற்சிஆகியவற்றால் கூட்டாக முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் மூலம் கிடைக்கப்பெற்ற தரவுகள், கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 'பல்பரிமாணப் பாதிப்புக்களைப் புரிந்துகொள்ளுதல்: இலங்கை மக்கள் மீதான தாக்கம்' என்ற தலைப்பிலான அறிக்கை வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது.

பல்பரிமாண அடிப்படையில் மக்களை நலிவுற்றவர்களாக உணரவைக்கும் காரணிகள் மற்றும் அவை பொதுமக்கள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் என்பவற்றை வெளிப்படுத்தும் நோக்கில் கடந்த 2022 நவம்பர் மாதம் முதல் 2023 மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் தேசிய குடித்தொகைக் கணக்கெடுப்பைப் பயன்படுத்தி நாடளாவிய ரீதியில் 25,000 குடும்பங்களை அடிப்படையாகக்கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் பிரகாரம் கடன்சுமை, கல்வியைப் பெற்றுக்கொள்வதில்நிலவும்நெருக்கடி மற்றும் இயற்கை அனர்த்தங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் என்பன பெரும்பாலான மக்களை நலிவாக உணரச்செய்யும் காரணிகளாக அடையாளங்காணப்பட்டுள்ளன.

அதேபோன்று கடந்தகாலத்தில் பொருளாதாரத்தின்மீது தொடர்ச்சியாக ஏற்பட்ட அழுத்தங்கள் ஏற்கனவே கட்டமைப்பு ரீதியில் நிலவிய பலவீனங்களை மேலும் மோசமாக்கியதுடன், அது கடந்த ஆண்டு மிகமோசமானபொருளாதாரநெருக்கடி ஏற்படுவதற்கு வழிவகுத்தது என்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் புதிய ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும்பொருளாதார நெருக்கடி மற்றும் உலகளாவிய பொருளாதார நெருக்கடி என்பன வறுமையால்பாதிக்கப்பட்டிருப்போரின் எண்ணிக்கை உயர்வு, உணவுப் பாதுகாப்பின்மை உயர்வு, அவசியமான மருந்து மற்றும் உபகரணப் பற்றாக்குறையின் விளைவாக சுகாதாரக்கட்டமைப்பில்பாதிப்பு, கல்வி நிலையில் சீர்குலைவு, பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்புக்கு உயர்வான அச்சுறுத்தல், காலநிலை மாற்றத்துடன்தொடர்புடையஇயற்கை அனர்த்தங்கள் ஆகியவற்றுக்கு வழிவகுத்திருப்பதுடன் இவை தற்போது இலங்கை முகங்கொடுத்திருக்கும்பல்பரிமாணப்பாதிப்புக்களைப் புலப்படுத்துவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 25 ஆயிரம் குடும்பங்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்டஇவ்வாய்வுகல்வி, சுகாதாரம் மற்றும் அனர்த்தங்கள், வாழ்க்கைத்தரம் ஆகிய மூன்று பிரதானகுறிகாட்டிகளைஅடிப்படையாகக்கொண்டுமேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்வியில் பாடசாலை வரவு மட்டம், ஆண்கள் கல்விபயிலும் ஆண்டுகள், பெண்கள் கல்விபயிலும் ஆண்டுகள் ஆகிய விடயங்களும், சுகாதாரம் மற்றும் அனர்த்தங்களில் உடலியல் நிலை, உணவு, குடிநீர் வசதி, முகங்கொடுத்த அனர்த்தம், அனர்த்தத்தை எதிர்கொள்வதற்கான இயலுமை ஆகிய விடயங்களும், வாழ்க்கைத்தரத்தில் சொத்துக்கள், கடன், வேலைவாய்ப்பின்மை, முறைசாராதொழில்கள்ஆகியவிடயங்களும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி இலங்கையின் பல்பரிமாணபாதிப்புச்சுட்டெண்0.206ஆகக் கணிப்பிடப்பட்டுள்ளது. (இச்சுட்டெண் 0-1வரைமதிப்பிடப்படுவதுடன், இங்கு 0என்பதுஎவரும்பாதிக்கப்படவில்லை என்பதையும், 1என்பது அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் குறிக்கின்றது.

எனவே இக்கணிப்பீட்டின்படி இலங்கையின் மொத்த சனத்தொகையில் 55.7 சதவீதமானோர் பல்பரிமாணப்பாதிப்புக்களால்நலிவுற்ற நிலையில் உள்ளனர். இதனை வேறு விதத்தில் கூறுவதாயின், 22.16 மில்லியன் சனத்தொகையில் 12.34 மில்லியன்பேர்நலிவுற்றிருப்பதாகவும், 10 பேருக்கு 6 பேர் என்ற விகிதத்தில் நலிவுற்றிருப்பதாகவும் கூறமுடியும்.

மேற்குறிப்பிட்டவாறு கல்வி, சுகாதாரம், அனர்த்தங்கள் மற்றும் வாழ்க்கைத்தரம் உள்ளிட்ட பல்பரிமாணப் பாதிப்புக்களால் நலிவுற்றிருக்கும் 12.34 மில்லியன் பேரில் பெரும்பான்மையைக் குறிக் கும் 10.13 மில்லியன் பேர் பின்தங்கியபிரதேசங்களிலேயேவாழ்கின்றனர்.

குறிப்பாக 71.8 சதவீதம் எனும் உயர்பாதிப்புக்கள்புத்தளம்மாவட்டத்திலும், 41.5சதவீதம்எனும்குறைந்தளவு பாதிப்புக்கள் மாத்தளை மாவட்டத்திலும் பதிவாகியுள்ளன. அதேபோன்று அதிக குடித்தொகையைக்கொண்ட கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் முறையே 1.23 மில்லியன் பேர், 1.37 மில்லியன் பேர் பல்பரிமாணப் பாதிப்புக்களால் நலிவுற்ற நிலையில் உள்ளனர். எனவே பின்தங்கிய பிரதேசங்களை இலக்காகக்கொண்டு அவசியமான கொள்கை மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று இந்த ஆய்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பெரும்பான்மையானோரை நலிவடையச்செய்திருக்கும் காரணிகளில் கடன்சுமை முக்கியமானது என்றும், இது மொத்த சனத்தொகையில் 33.4 சதவீதமாகக் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன்அவர்களில் பலர் உணவு, மருத்துவ வசதி, கல்வி போன்ற அடிப்படைத்தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்காகக் கடன்பெற்றிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறதொரு பின்னணியில் நாடளாவிய ரீதியில் நலிவடைந்திருக்கும்சமூகப்பிரிவினருக்கு அவசியமான உதவிகளை வழங்கக்கூடியவகையில்நிலைபேறானதும்செயற்திறன்மிக்கதுமான கொள்கைகளை வகுப்பதுடன் தீர்மானங்களை மேற்கொள்ளல், சமூகப்பாதுகாப்பு செயற்திட்டங்களை முன்னெடுக்கும்போது நலிவுற்ற சமூகப்பிரிவினர் தொடர்பான குறிகாட்டிகளில் அதிக கவனஞ்செலுத்தல், முறையான திட்டமிடல் மற்றும் நேர்த்தியான வள ஒதுக்கீட்டின் மூலம் விசேட தேவையுடையோர் மத்தியில் மீளெழுச்சித்தன்மையை வலுப்படுத்தல், குடும்பங்கள் முகங்கொடுக்கும் கடன்சுமையால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை இழிவளவாக்குவதற்கு ஏற்றவாறான நிலைபேறானஉத்திகளைக்கையாளல், காலநிலைமாற்றத்துடன்தொடர்புடைய அனர்த்தங்களைஎதிர்கொள்வதற்கான முற்கூட்டிய ஆயத்த செயற்திட்டத்தைத் தயாரித்தல், காலநிலை மாற்றங்களால்பாதிக்கப்படாதநீர்வழங்கல் கட்டமைப்பினை உருவாக்கல், தரமான கல்வி வழங்கலுக்கான முதலீட்டை விரிவுபடுத்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கு மாறு இந்த ஆய்வறிக்கையில் பரிந் துரைக்கப்பட்டுள்ளது. (05)

# நலிவுற்ற சமூகப்பிரிவினரின் தேவைகளை பூர்த்திசெய்ய கொள்கைத் திட்டம் அவசியம்

## ஐ. நா. அபிவிருத்தித்திட்டத்தின் ஆய்வறிக்கை தெரிவிப்பு

இலங்கையில்நலிவுற்ற நிலையில் உள்ள பின்தங்கிய சமூகப்பிரிவினரின் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியவாறான கொள்கை வகுப்பு மற்றும் செயற்திட்ட உருவாக்கத்தில் அரசாங்கம் விசேட கவனஞ்செலுத்தவேண்டுமென புத்திஜீவிகள் மற்றும் பல்துறைசார் நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் வறுமை மற்றும் மனித அபிவிருத்தி முன்முயற்சி ஆகியவற்றால் கூட்டாக முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் மூலம் கிடைக்கப்பெற்ற தரவுகள், கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 'பல்பரிமாணப்பாதிப்புக்களைப்புரிந்து கொள்ளுதல்: இலங்கை மக்கள் மீதான தாக்கம்' என்ற தலைப்பிலான ஆய்வறிக்கையின் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு, பண்டாரநாயக்கஞாபகார்த்தசர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பல்பரிமாண அடிப்ப டையில் மக்களை நலி வுற்றவர்களாக உணர வைக்கும்காரணிகள்மற்றும் அவை பொதுமக்கள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் என்பவற்றைவெளிப்படுத்தும் நோக்கில்கடந்த 2022 நவம்பர் மாதம் முதல் 2023 மார்ச் மாதம்வரையானகாலப்பகுதியில் தேசிய குடித்தொகைக் கணக்கெடுப்பைப்பயன்படுத்தி நாடளாவிய ரீதியில் 25 ஆயிரம் குடும்பங்களை அடிப்படையாகக்கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இந்த ஆய்வறிக்கையின்வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றிய ஐக்கியநாடுகள்அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அசுஸா குபோடா, 'அண்மைய காலங்களில் நிதியியல் கட்டமைப்பானது மிகவேகமாகச்சுருக்கமடைந்துவரும் நிலையில், பல்பரிமாணத் தாக்கங்கள் பற்றிய புரிதலை மேலும்ஆழமாக்குதல்என்பது செயற்திறன்மிக்க கொள்கை உருவாக்கத்துக்கான முதற்படியாகும்' என்று சுட்டிக்காட்டினார். அந்தவகையில் இலங்கை தொடர்பான இந்த அறிக்கை நலிவுற்ற சமூகத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய கொள்கை உருவாக்கம் மற்றும் செயற்திட்ட வடிவமைப்பில் மிகவும் வலுவான தாக்கத்தைச் செலுத்தும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அதேவேளை இந்த ஆய்வறிக்கைத் தயாரிப்பில் பணியாற்றிய ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் வறுமை மற்றும் மனித அபிவிருத்திமுன்முயற்சியின் பணிப்பாளர் கலாநிதி சபினா அல்கிரே, 'பல்பரிமாணப் பாதிப்புக்களைப் புரிந்துகொள்ளுதல்: இலங்கை மக்கள் மீதான தாக்கம்' என்ற அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள மற்றும் கண்டறியப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் தொடர்பில் விளக்கமளித்தார். 'இலங்கையில் 55.7 சதவீதமானோர், அதாவது நாட்டின் மொத்த சனத்தொகையில் 12.3மில்லியன்மக்கள்பல்பரிமாணப் பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றனர் என்ற சிக்கலான விடயத்தை இந்த அறிக்கை வெளிச்சம்போட்டுக் காண்பித்துள்ளது' என்று சுட்டிக்காட்டிய அவர், இந்நிலைவரத்தை உரியவாறு கையாள்வதற்குகடன்களின் அளவைக் குறைத்தல் மற்றும் அனர்த்தங்களுக்கு முகங்கொடுப்பதற்கான முற்கூட்டியதயார்நிலையை வலுப்படுத்தல் என்பன இன்றியமையாதனவாகும் என்று வலியுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து ஐக்கியநாடுகள்அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அசுஸா குபோடாவால் வெளியிட்டுவைக்கப்பட்ட இந்த ஆய்வறிக்கையைப்பெற்றுக் கொண்ட கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நாட்டின் கல்வித்துறையை முன்னேற்றுவதற்கும் கல்வியைப்பெற்றுக்கொள்வதில் பின்தங்கிய சமூகங்களைச்சேர்ந்தமாணவர்களின் இயலுமையைமேம்படுத்துவதற்கும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்துத் தெளிவுபடுத்தியதுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 17 ஐயும் அடைந்துகொள்வதற்குரிய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன எனக் குறிப்பிட்டார்.

'நான் கல்வியமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது நாடு தீவிர பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்தது. எரிபொருள், எரிவாயு, மின்சாரம் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருள் மற்றும் சேவை விநியோகங்களும் தடைப்பட்டிருந்தன. இருப்பினும் நாம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில்இச்சவாலுக்கு முகங்கொடுப்பதற்கு முன்வந்தோம். அதன்படி நன்கொடையாளர்களின் 70 சதவீத உதவியின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கான பாட நூல்கள் மற்றும்சீருடைத்துணி என்பன இலவசமாகவழங்கப்பட்டன. அவ்வுதவியை இவ்வருடம் 100 சதவீதமாக உயர்த்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று அடுத்த சில வருடங்களில் சுமார் 3,000 பாடசாலைகளை தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கு முன்னுரிமையளித்துத்திறம்படக் கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்த்துள்ளோம்' என்று தெரிவித்தார்.

இருப்பினும் இந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக் கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எமது நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடி மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டதெனச் சுட்டிக்காட்டியதுடன் எனவே அரசியல்வாதிகள் 'அதனைச்செய்வோம், இதனைச்செய்வோம்' என்று கூறுவதைவிடுத்து, வகுக்கப்படும் செயற்திட்டங்களுக்கு செயல்வடிவம் வழங்கவேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும்இந்த ஆய் வறிக்கை தொடர்பில் நடைபெற்ற குழு ரீதியான கலந்துரையாடலில்பங்கேற்ற கலாநிதி ரமணி குணதிலக, பி.எஸ்.எம்.சாள்ஸ், வைத்திய கலாநிதி வின்யா ஆரியரத்ன ஆகியோர் பின்தங்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக நாட்டின் பல்வேறு பாகங்களிலும் நிலவும் யதார்த்தபூர்வமான பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்து பலதரப்பட்ட கருத்துக்களை விரிவாக முன்வைத்தனர்.

அமைச்சர்ஜீவன்தொண்டமான்மற்றும்அதிகாரிகளுக்கு இடையிலான மேற்படி சந்திப்பில், மேற்படி கொள்கைநடவடிக்கைகளை அடைவதில் ஏற்பட்டுள்ளமுன்னேற்றத்தை மதிப்பிடுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது. நிலையான அபிவிருத்தி இலக்குகளைஅடைவதற்கும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், நீண்டகால சுற்றாடல் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும் இலங்கையின் அர்ப்பணிப்புடன் இந்த சீர்திருத்தங்கள் எவ்வாறு இணைந்துள்ளன என்பன பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டது. சீர்திருத்தங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான தனது அர்ப்பணிப்பை இதன்போது அமைச்சர் வெளிப்படுத்தினார். நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், இந்த சீர்திருத்தங்கள் மக்களின் வாழ்வில் ஏற்படுத்தும் நேர்மறையான தாக்கத்தையும் பட்டியலிட்டுள்ளார். மேற்படி இலக்குகளைஅடைவதற்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் முன்னெடுக்கப்படும் நகர்வுகளுக்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும் எனவும்கூறப்பட்டுள்ளது. (05)

# திருட முற்பட்ட ஒருவர் மரத்தால் வீழ்ந்து காயம்

மட்டக்களப்புதலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள புதூரில் திருடன் ஒருவன் அவனது பக்கத்து வீட்டில் திருடமுற்பட்டவேளைமரத்தில் இருந்துகீழேவீழ்ந்து காயமடைந்துவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

வியாழக்கிழமை மாலை திருடன் வீட்டின் கூரையை உடைத்து திருட முற்பட்டவேளை, திருடனை கண்டுவீட்டில் உள்ளவர்கள் சத்தமிட்டுள்ளனர்.

இந்நிலையில், திருடன் அங்கிருந்து தப்பி ஓடுவதற்காக கூரையில் இருந்துஅருகிலுள்ளமரத்தில் பாய்ந்து ஏறி ஒளித்துக் கொண்டான். திருடனை பிடிப்பதற்காக அயலவர்கள் ஒன்றிணைந்ததையடுத்து திருடன் அங்கிருந்து தப்பி ஓடுவதற்காக முயற்சித்தபோதுகீழே வீழ்ந்துகால் இரண்டாக உடைந்துள்ளது.

இதனையடுத்து, அயலவர்கள் திருடனை பிடித்து வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# 3 அம்பர் துண்டுகளை வைத்திருந்த 3 நபர்கள் கெஹல்பந்தரவில் கைது

646 கிராம் நிறை கொண்ட அம்பர் எனப்படும் பாதுகாக்கப்பட்ட கடல் திமிங்கல வாந்தியின் 3 துண்டுகளை வைத்திருந்த ஓய்வுபெற்ற, அங்கவீனமுற்ற இராணுவ சிப்பாய் உட்பட மூவர் நெதகமுவ கெஹல்பத்தர பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர் என கம்பஹா பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நெதகமுவையைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரும், 48 வயதுடைய ஓய்வுபெற்ற அங்கவீனமுற்ற இராணுவச் சிப்பாய் ஒருவரும், கலகெடிஹேனையைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதிக பெறுமதியான அம்பர் விற்பனை செய்யப்படவுள்ளதாக மேல் மாகாணபுலனாய்வுபிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய கம்பஹா பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி கோசல லியனாராச்சி உள்ளிட்ட குழுவினரே சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர். (05)

# போதைப்பொருள் கடத்தலுக்கான கப் வாகனத்துடன் 5 பேர் கைது



போதைப்பொருள் கடத்தலுக்காக பிரத்தியோகமாக மாற்றி அமைக்கப்பட்ட கப் ரக வாகனத்துடனும், ஒன்றரை கோடி ரூபா பணத்துடனும் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் கடற்படையினர், பொலிஸ் விசேட அதிரடி படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து கூட்டு தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, சந்தேகத்துக்கு இடமான கப் ரக வாகனம் ஒன்றை சோதனையிட்ட போது, அந்த வாகனத்தின் பெட்டியின் கீழ் மேலுமொரு பெட்டி அடிக்கப்பட்டு, போதைப்பொருள்கடத்தலுக்கு ஏதுவாக வாகனத்தை மாற்றி அமைக்கப்பட்டு இருந்தமையைகண்டறிந்துள்ளனர்.

அதனை அடுத்து வாகனத்தில் பயணித்த இருவரையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் மூன்று சந்தேக நபர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் உரும்பிராய், மாதகல் மற்றும் ஊவா மாகாணம், குடாஓயா ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும், அவர்களிடம் இருந்து கப் ரக வாகனம் , மோட்டார் சைக்கிள் மற்றும் ஒருகோடியே 50 லட்சம் ரூபா பணம் என்பன மீட்கப்பட்டன என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களும் , மீட்கப்பட்ட பொருள்களும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது. (05)

# உலக்கையால் தாக்கிய பொலிஸ் உத்தியோகத்தரை மனைவியும் இரு பெண் பிள்ளைகளும் கட்டிவைப்பு

மனைவியை உலக்கையால் தாக்கி காயப்படுத்திவிட்டு, தனது இரண்டு மகள்களையும் வீட்டையும் தாக்க முயன்றதாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை, அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளும்பிடித்துபொலிஸாரிடம் ஒப்படைத்துள்ள நிலையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனைவி மீது சந்தேகமடைந்தபொலிஸ்கான்ஸ்டபிள் மனைவியைஉலக்கையால் தாக்கியதுடன் பிள்ளைகள் மீதும் தாக்குதலை மேற்கொள்ள முயற்சித்துள்ளார். இதையடுத்துஅவரைமனைவியும் இரு பிள்ளைகளுமாக இணைந்து கட்டி வைத்துவிட்டு பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம், ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று கான்ஸ்டபிளின் வீட்டிற்குச் சென்று கட்டப்பட்டிருந்த கான்ஸ்டபிளை அவிழ்த்து கைது செய்துள்ளனர்.

பொலிஸ்கான்ஸ்டபிளான கணவர் மதுபோதையில் தாக்குதலைமேற்கொண்டார் எனவிசாரணைகளில்இருந்து தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிள் கொழும்பில் உள்ளபொலிஸ்நிலையத்தில் கடமையாற்றுபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# இலங்கைக்கு எந்நிலையிலும் ஒத்துழைப்பு வழங்குவோம்

## ஜப்பான் பிரதிநிதிகள் குழு உறுதி









இலங்கை விரைவான பொருளாதார ஸ்திரபடுத்தலை இலக்காகக் கொண்டு செயற்படுகிறது. சர்வதேச ஒத்துழைப்புக்கு மத்தியில் இலங்கை மீண்டும் பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொள்ளாது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஜப்பான் நாட்டின் பிரதிநிதிகள் குழுவினரிடம் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள தகஷிதி யுசுகே தலைமையிலான மேலவை அமைச்சர் சபையின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதேகி ஆகியோருக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நிதியமைச்சில் இடம்பெற்றது.

இலங்கை விரைவான பொருளாதார ஸ்திரப்படுத்தலை இலக்காகக் கொண்டு செயற்படுகிறது. சர்வதேச ஒத்துழைப்புக்கு மத்தியில் இலங்கை மீண்டும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளாது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து இலங்கை மீட்சிப்பெறுவதற்கு ஜப்பான் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் ஜப்பான் ஆரம்பத்தில் இருந்து இலங்கைக்கு சாதகமாக செயற்படுவது வரவேற்கத்தக்கது என நிதி இராஜாங்க அமைச்சர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீண்டும் இலங்கை வலுவானதொரு முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு எந்நிலையிலும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். என தகஷிதி யுசுகே தலைமையிலான மேலவை அமைச்சர் சபையின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் உறுதியளித்துள்ளனர். (05)

# சுகாதார அமைச்சரை உடன் மாற்றுங்கள் வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம்






அரச வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வைக் கோருவதற்கு பொது மக்களிடம் கையெழுத்து பெறும் போராட்டம் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட கிளையால் வவுனியா செட்டிக்குளத்தில் இந்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது. மருந்து தட்டுப்பாட்டை நீக்குவதுடன், தற்போதைய சுகாதார அமைச்சரை மாற்றி மக் களுக்கு நன்மை செய்யக் கூடிய ஒருவர் சுகாதார அமைச்சராக நிய மிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியே பலரிடம் கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டன. இப்போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (05 -100)

# இலங்கை – இந்திய சமுதாய பேரவையின் புதிய தலைவராக அமைச்சர் ஜீவன் தெரிவு



இலங்கை, இந்திய சமுதாயப் பேரவையின் புதிய தலைவராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை, இந்தியாவுக்கிடையிலான வர்த்தக மற்றும் கலாசார ரீதியிலான உறவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இந்த பேரவை அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை, இந்திய சமுதாயப் பேரவையின் முன்னாள் தலைவர் சிவராமன் மற்றும் பேரவையின் உயர்மட்ட உறுப்பினர்களால் விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரமே தலைமைப் பதவியை அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஏற்றுக் கொண்டுள்ளார் என நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார, வர்த்தக தொடர்புகளை விரிவாக்குவது, இளம் தொழில் அதிபர்களை உருவாக்குதல் மற்றும் மலையக தொழில் முனைவோருக்கு முக்கியத்துவம் அளித்தல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பிரமிட் திட்டங்களை ஊக்குவிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்

## மத்திய வங்கி எச்சரிக்கை

சட்ட விரோத பிரமிட் திட்டங்களை ஊக்குவிப்பவர்களுக்கு எதிராக குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும் என இலங்கை மத்திய வங்கி வலியுறுத்தியுள்ளது.

இதற்கமைய இது போன்ற செயல்களில் ஈடுபடுபவர்களை பிடியாணையின்றி கைதுசெய்ய முடியும் எனவும் இது பிணையில் வெளிவர முடியாத குற்றம் எனவும் சுட்டிக்காட்டியுள்ள மத்திய வங்கி, தடை செய்யப்பட்டுள்ள பிரமிட் திட்டங்களை முறையான திட்டமாகக் காட்டுவதற்கு பல்வேறு தந்திரங்கள் கையாளப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

முதலீடுகளைப் பெறுவதற்காக நான்கு அடிப்படையில் கடத்தல் பிரமிட் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பில் மத்திய வங்கிக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த மோசடிக்காரர்கள் இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ளும் பிரமிட் திட்டங்கள் சட்டபூர்வமானது என காட்டிக்கொள்வதற்காக தாம் மத்திய வங்கியின் விதிமுறைகளுக்கு ஏற்ப முதலீட்டாளர்களின் நிதிகளை பாதுகாப்பதாகவும் இந்தத் திட்டத்தின் மூலம் உரிய வரிகள் அரசுக்கு செலுத்தப்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

பொதுமக்களை தவறாக வழிநடத்தும் நோக்கில் இந்த திட்டங்கள் குறித்து மத்திய வங்கியுடன் பேச்சு நடத்துவதாக இந்த மோசடிக்காரர்கள் கூறுகின்றனர். இந்த விடயத்தில் எந்தவித உண்மையும் இல்லை என பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம். இலங்கை மத்திய வங்கியின் உத்தியோக பூர்வ இணையத்தளத்திலும் வெளிநாட்டுச் செலாவணி திணைக்களத்தின் இணையத்தளத்திலும் மத்திய வங்கியின் உரிமம் பெற்ற மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே, பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களைத் தவிர ஏனைய நிறுவனங்களில் பணத்தை முதலீடு செய்யக்கூடாது என்பதுடன் இந்தத் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் கவனத்துடன் இருக்குமாறு மத்திய வங்கி மேலும் தெரிவிக்கிறது.

இத்தகைய திட்டங்களுடன் இணைவதன் மூலம் ஒருவர் தனது பணத்தை இழக்க அதிக வாய்ப்புள்ளது. எனவே, இத்தகைய திட்டங்களில் ஈடுபடவோ அல்லது முதலீடு செய்யவோ வேண்டாம் என மத்திய வங்கி மேலும் அறிவுறுத்துகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# ரணிலுடன் ஒன்றிணையும் நிலைப்பாட்டில் மைத்திரி

## ரோஹித அபேகுணவர்தன சாடல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படும் நிலைப்பாட்டில் சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளார்.

சுதந்திரக் கட்சியுடன் கூட்டணியமைக்கும் தரப்பினர் எந்நிலையிலும் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

மஹறகரம பகுதியில் நடைபெற்ற கட்சி கூட்டத்தின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு மக்களாணைகிடையாது. கட்சி இல்லாதொழிந்து விட்டது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுகிறார்.

நாடாளுமன்றத்தில் உள்ள சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து கூட்டணியமைத்து புதிய அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பொதுஜன பெரமுன என்பது ஒரு கட்சியா என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேள்வியெழுப்பினார்.

2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவானதை அவரும், சுதந்திரக் கட்சியினரும் மறந்து விட்டார்கள்.

சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்து அடுத்தக்கட்ட அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கிறார்.

சுதந்திரக் கட்சியினருடன் கூட்டணி அமைக்கும் தரப்பினர் எந்நிலையிலும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

வெகுவிரைவில் தேர்தல் ஒன்றை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளோம். கட்சியின் செயற்பாடுகளுடன் பலப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள கட்சியின் வருடாந்த மாநாட்டில் அரசியல் ரீதியில் முக்கிய தீர்மானங்களை அறிவிப்போம். - என்றார். (05)

# கைத்தொழில் உற்பத்தி கண்காட்சி யாழ். நகரில் இன்றும் இடம்பெறும்

கைத்தொழில் உற்பத்தி கண்காட்சி இரண்டாவது நாளாக நேற்றும் இடம்பெற்றது.

மேற்படி கண்காட்சி 2 ஆம் நாள் நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய கலாசார மத்திய நிலைய வளாகத்தில் ஆரம்பமானது.

கைத்தொழில் அமைச்சும், கைத்தொழில் அதிகார சபையும் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த நிகழ்வில் அமைச்சர் சாமர சம்பத் திஸாநாயக்க, இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன அமைச்சின் செயலாளர்கள், கைத்தொழில் அதிகார சபை அதிகாரிகள், ஊழியர்கள், உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

குறித்த கண்காட்சி இன்றும் இடம்பெறவுள்ளது.

இதற்காக நாடளாவிய ரீதியிலிருந்து வருகை தந்த கைத்தொழில் நிறுவனங்கள் தமது உற்பத்திகளை காட்சிப்படுத்தியதுடன், சந்தைப்படுத்தலிலும் ஈடுபட்டுள்ளன. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# காணி, பொலிஸ் தவிர ஏனைய அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்படல் வேண்டும்

## அரசின் நிலைப்பாடு அது என்கிறார் பிரசன்ன ரணதுங்க



அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தின் கீழ் இருக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைத் தவிர ஏனைய அனைத்து அதிகாரங்களையும் மாகாணசபைகளுக்கு வழங்க வேண்டும்என்றநிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி உட்பட அரசாங்கம் இருக்கிறது என ஆளும்தரப்பு பிரதம கொறடாவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையல் செயற்படுத்தப்படும் 'உங்களுக்கு வீடொன்று நாட்டுக்கு எதிர்காலம்' வீடமைப்பு கருத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் வீட்டு உரிமையாளர்களுக்கு காணி உரித்துரிமை பத்திரம் மற்றும் வீட்டுக்கடன் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில் -

அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் தற்போதும் அமுலில் இருக்கிறது. அதனால்தான் மாகாண முதலமைச்சராக என்னால் செயற்பட முடியுமாகி இருந்தது. மேல்மாகாணத்தில்எங்களால் முடிந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருந்தோம்.

அத்துடன் நிர்வாக அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் எப்போதும் இருந்து வருகிறேன். ஏனெனில் கொழும்பில் இருந்து கல்வி அமைச்சு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகளுக்குதீர்வுகாணமுடியாது.

அதனால் நிர்வாக அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகளுக்கு அந்த மாகாணங்களுக்குள்ளே தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியுமாகிறது.

அத்துடன் அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தில் இருக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைத் தவிர ஏனைய அனைத்து அதிகாரங்களையும் மாகாணசபைகளுக்குவழங்கவேண்டும் என்பதே ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். அதில் ஏதாவது திருத்தங்கள் மேற்கொள்ளவதாக இருந்தால்அதுதொடர்பில்கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க முடியும். - என்றார். (05)

# ஓகஸ்ட்டில் பணவீக்கம் 4 சதவீதமாக வீழ்ச்சி

கொழும்புநுகர்வோர்விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த ஜூலை மாதம் 6.3 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், ஓகஸ்ட் மாதம் 4 சதவீதமாக கணிசமானளவால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதன்படி கடந்த ஜூலை மாதத்தில் 1.4 சதவீதமாகப் பதிவான உணவுப்பணவீக்கம் ஓகஸ்டில் 4.8 சதவீதமாகவும், ஜூலையில் 10.5 சதவீதமாகப் பதிவான உணவல்லாப்பணவீக்கம் ஓகஸ்ட் மாதம் 8.7 சதவீதமாகவும் பதிவாகியுள்ளது.

மேலும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணின் மாதாந்த மாற்றம் ஓகஸ்ட் மாதத்தில் -0.02 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. இதற்கு உணவுப்பொருள்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட -0.41 சதவீத வீழ்ச்சியும், உணவல்லாப்பொருள்கள்மற்றும் சேவைகளின் விலைகள், கட்டணங்களில் அவதானிக்கப்பட்ட 0.39 சதவீத அதிகரிப்பும் காரணமாக அமைந்துள்ளன.

அதேவேளை பொருளாதாரத்தின் அடிப்படைப்பணவீக்கத்தைப்பிரதிபலிக்கின்றமையப்பணவீக்கம் கடந்த ஜூலை மாதத்தில் 5.9 சதவீதத்திலிருந்து ஓகஸ்டில் 4.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

தீவிர பொருளாதார நெருக்கடியின் பின்னரான காலகட்டத்தில் பணவீக்கம் தொடர்ந்து 11 ஆவது மாதத்தில் 4 சதவீதம் என்ற மென்நிலையைப் பதிவுசெய்திருப்பதுடன், கடந்த 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் பின்னரான காலப்பகுதியில் பதிவான மிகக்குறைந்தளவிலான பணவீக்கம் இதுவாகும். இது இவ்வாறிருக்க தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெணுக்கு அமைவாக மதிப்பிடப்படும் நாடளாவிய ரீதியிலான பணவீக்கம் கடந்த ஜூன் மாதம் 10.8 சதவீதமாகப் பதிவாகியிருந்த நிலையில், அது கடந்த ஜூலை மாதத்தில் 4.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## குருந்தூர்மலை விகாரை விவகாரத்தில்

# நீதிமன்றக் கட்டளையை மீறிய அதிகாரியை பாதுகாக்கிறது அரசு

## சபா குகதாஸ் குற்றச்சாட்டு

குருந்தூர்மலையில்ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தை அழித்துக்கட்டப்பட்டவிகாரை சட்டவிரோதமானது என முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் ஒன்றுக்கு மூன்று தடவைகள் கட்டளை பிறப்பித்துள்ளபோதும், அதனை மீறி தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் விகாரையைக் கட்டி முடித்திருக்கிறார். ஆனால் அவர்இந்தஆட்சியாளர்களால் பாதுகாக்கப்படுகின்றார்என்று குற்றஞ்சாட்டியுள்ளார் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்.

"தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நீதிமன்றக் கட்டளையைத் தூக்கி எறிந்து சட்டவிரோதமாக விகாரையைக் கட்டி முடிக்கத் தீவிரமாகச் செயற்பட்டுள்ளார். இப்படியாக நீதிமன்றக் கட்டளையை கையில் எடுத்து அவமதிப்பு செய்த அரச அதிகாரி யாரால் பாதுகாக்கப்படுகின்றார்? நீதித் துறை சுயாதீனத் தன்மையைஇழந்துள்ளதா?அல்லது வடக்குக்கு ஒருநீதிதெற்குக்கு ஒரு நீதியா? அல்லது ஒரு நாடு இரண்டு சட்டமா? இவ்வாறான பல கேள்விகள் நீதி கோரி நிற்கும் மக்களிடம் எழுந்துள்ளன" என்றார்அவர்.

குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி விகாரை அமைக்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதையொட்டி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நல்லிணக்கம் , நீதி, ஊழல் பற்றி மேடைகளில் பேசும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச இப்படி ஒரு அநியாயத்தைக் கண்டு கொள்ளாதவர் போல நித்திரை கொள்வதன் நோக்கம் என்ன? இனவாதமா?

சாதாரண குடிமகன் சட்டத்தை மீறினால் பின்னி எடுக்கும் காவல்துறை, நீதிமன்றக் கட்டளையை மீறியவர்களைக் கைது செய்யாதது மட்டுமல்ல அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதையும் பார்க்கும் போது ஜனாதிபதிநிலையான தீர்வு, அபிவிருத்தி பற்றி பேசுவது வேடிக்கையாக உள்ளது. அரகலயபோராட்டத் தரப்பை அடக்க இராணுவத்தை ஏவி விட்ட ஜனாதிபதி, நீதிமன்ற கட்டளையை மீறிசட்டவிரோதநடவடிக்கைகளை ஈடுபடும் அதிகாரத் தரப்புக்களை தட்டிக் கேட்காமல் தண்டனை வழங்காமல் இருப்பது பாதிக்கப்படுவது தமிழர்கள் என்பதனாலா? நீதிமன்ற கட்டளையை மதித்து நீதி வழங்க முடியாத ஆட்சியாளர்கள் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்க மாட்டார்கள்என்பதைமீண்டும் மீண்டும் இச்செயற்பாடுகள் நிரூபிக்கின்றன.

நாட்டின் நீதித் துறை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதால் நீதிமன்றத்தின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கும் குறைந்தபட்சநீதியையும்ஏற்றுக்கொள்ள அரச இயந்திரம் தயாராக இல்லை என்பதை குருந்தூர் விவகாரம் வெளிப்படுத்தியுள்ளது - என்றுள்ளது.

# மீண்டும் போராட்டத்துக்கு தயாராகின்றது இலங்கை

## செந்தில்வேல் எச்சரிக்கை

நாட்டில் மீண்டும் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படும் சாத்தியம் உள்ளதாக புதிய மார்க்சிசலெனின்கட்சியின்பொதுச்செயலாளர் சி.கா.செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நிச்சயமாக நாட்டில் மீண்டும் நெருக்கடி ஏற்பட சாத்தியம் உள்ளதுடன். வரிசை ஏற்படும் அபாயம் தற்பொழுது தலைதூக்க வழி கோருகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேறுநாடுகள்மற்றும்அமைப்புகளினூடாக கடன் வாங்குகின்றார்கள் தவிர கடன் கொடுப்பதாக இல்லை.

இந்த ஆட்சியாளர்கள் ஒரு கடனை அடைப்பதற்கு மேலும் பல கடன்களை பெறுகின்றார்கள்.

நாட்டினுடையஉற்பத்திஅதிகரிக்கப்பட்டால் மாத்திரமே கடன் தொகைகளை திரும்ப செலுத்த முடியும்எனவும்சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஏற்றவாறு அமையவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# எழுதுமட்டுவாழில் பூசகரிடம் வாள்முனையில் கொள்ளை

ஆலயப் பூசகரிடம் வாள் முனையில் பணம் கொள்ளையிடப்பட்டதாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டம் கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தில்பூசை முடிந்துக்கொண்டுவீடு திரும்பிக் கொண்டிருந்த பூசகரை வழிமறித்த கொள்ளைக் கும்பல் வாள் முனையில் மிரட்டி அவரிடமிருந்த பணம் முழுவதையும் பறித்துச்சென்றுள்ளனர் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளைக் கும்பலில் மூவர் அடங்கியிருந்தனர் என்று பூசகர் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார்.

# நாமலின் திருமண மின் கட்டண விவகாரம்; கணக்காய்வு அறிக்கை கேட்டு மனு தாக்கல்



நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமண வைபவத்திற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வீரகெட்டியவில் உள்ள வீட்டிற்கு மின்சாரம் வழங்கியதற்கான கட்டணம் செலுத்தப்படவில்லை என்று கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கணக்காய்வாளர் நாயகத்திற்கு உத்தரவு பிறப்பிகக் கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஈ.ஜே.விஜித குமார என்ற சட்டத்தரணியினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுவின் பிரதிவாதிகளாக இலங்கை மின்சார சபை, அதன் தலைவர் என்.எஸ். இலங்ககோன், முன்னாள் தலைவர் ரகித ஜயவர்தன, கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி. விக்ரமரத்ன, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ , டி.வி.சானக்க உள்ளிட்டோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமண நிகழ்வு 2019 செப்டெம்பர் 12 முதல் 15 வரை மூன்று நாள்கள் வீரகெட்டியவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷ வின் இல்லத்தில் இடம்பெற்றதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்காக பெறப்பட்ட மின்சாரத்திற்கு சுமார் 27 லட்சம் ரூபா அறிவிடப்பட வேண்டும் என மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருமண நிகழ்வு நடைபெற்ற செப்டெம்பர் 12 முதல் 15 வரை அந்த வீட்டுக்கும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் பாதுகாப்பான மின் விளக்குகளை வழங்குமாறு மின்சக்தி அமைச்சரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக்க கோரிக்கை விடுத்திருக்கிறார் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், அப்பகுதிக்கு மின்சாரம் வழங்குமாறு அப்போதைய மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர், மின்சார சபை அதிகாரிகளுக்கு அறிவித்தார் எனவும், அது தொடர்பான கொடுப்பனவுகளை மகிந்த குடும்ப உறுப்பினர்கள் செலுத்தத் தயாராக இருந்தனர் எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அந்தத் தொகை இதுவரை செலுத்தப்படவில்லை என்றும், பிரதிவாதிகள் தங்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி மின்சாரத்தைப் பெற்றனர் எனவும், மின்கட்டணத்தைச் செலுத்தத் தவறிவிட்டனர் எனவும் மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளார்.

மாதாந்திர மின்கட்டணமான 7,390 ரூபாயை செலுத்தாததால் தனது வீட்டில் மின்சார சபை மின்சாரத்தை துண்டித்ததாகச் சுட்டிக்காட்டும் மனுதாரர், பெருமளவான மின்கட்டணம் செலுத்தப்படாத நிலையில் வீரகெட்டியவீட்டில்மின்சாரத்தைதுண்டிக்காது மற்றையவர்களின் வீட்டில் மின்சாரத்தை துண்டித்தமை சட்டத்தின் பார்வையில் முற்றிலும் சட்டவிரோதமானது என குறிப்பிட்டுள்ளார்.

இதன் ஊடாக அரசமைப்புச் சட்டத்தின் 12(1) பிரிவின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்குமாறு மனுதாரர், நீதிமன்றத்தில் கோரியுள்ளார்.

2019 செப்டெம்பர் 12 முதல் 15 வரை மகிந்த ராஜபக்ஷவின் வீரகெட்டிய வீட்டுக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பான ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுதாரர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

அத்துடன், அந்த வீட்டிற்கு மின்சாரம் வழங்கியதன் மூலம் இலங்கை மின்சார சபையின் தலைவர் மற்றும் முன்னாள் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள், அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளனர் என்று அறிவிக்குமாறும் மனுதாரர் நீதிமன்றில் மேலும் கோரியுள்ளார்.

# காட்டில் கரடி தாக்கி வவுனியாவாசி காயம்

## ஒரு கண் பறிபோனது

கரடி தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டம் சிதம்பரபுரம் காட்டுப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. காட்டுக்குச் சென்றவரை வெள்ளிக்கிழமை இரவு கரடி தாக்கியுள்ளது. இதில் அவரது கண் ஒன்று கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அவர் பார்வையை இழந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. அவருக்குத் தலையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன. கரடியின்பிடியில் இருந்து தப்பி வீட்டருகே வந்து சேர்ந்த அவரை அயலவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

சம்பவம் தொடர்பில் வவுனியா, சிதம்பரபுரம் பொலிசார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அதானியின் காற்றாலைகளால் மக்களுக்கு பாதிப்பு வரக்கூடாது

## சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்து

இந்தியாவின் அதானி குழுமத்தினால் பூநகரி, மன்னார் பகுதிகளில் அமைக்கப்படவிருக்கும் காற்றாலைகள் மக்களுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் இல்லாத வகையில் அமைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் வலியுறுத்தினார். யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பூநகரி, மன்னார் பகுதிகளிலே விலை மனுக் கோரப்படாமல் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் உருவாக்கப்படஇருக்கின்றன. இந்திய முதலீட்டாளர்கள் இதற்கான முதலீட்டை செய்ய இருக்கின்றார்கள் என்ற செய்திகள் பரவிக் கொண்டு இருக்கின்றன.

இந்தத் திட்டத்திற்கு விலை மனு கோரப்படவில்லைஎன்றகுற்றச்சாட்டை சிலர் முன்வைக்கின்றார்கள். அதே நேரத்தில் இந்த முதலீடுகள் வரவேண்டும் என சிலர் கருத்துக்களை முன் வைக்கின்றார்கள்.

இந்தக்காற்றாலைமூலம் சமூகத்திற்கு பிரச்சினைகள் அல்லது பாதிப்புகள் ஏற்படடும் எனவும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றன. அறிவியல் ரீதியாக அது எந்தளவுக்குச் சரி என்று எனக்கு தெரியவில்லை. ஆனாலும் இந்த விடயங்கள் எல்லாவற்றையும்கவனத்தில் எடுத்து இந்த முதலீட்டை செய்ய விடுவது சரி என்றுதான் நான் நினைக்கிறேன்.

அது இந்திய நிறுவனங்களாக இருக்கலாம் அல்லது வேறு நிறுவனங்களாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும்எமதுமக்களுக்கு பாதிப்பு இல்லாதவாறு இருக்க வேண்டும் - என்றார்.

# இந்திய நிதி உதவி அதிகரிப்பு

இலங்கையில் தமது உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை இந்திய அரசு அதிகரித்துள்ளது. இந்திய -இலங்கை உயர் பெறுபேற்று சமூக அபிவிருத்தி திட்டம் என்ற கட்டமைப்பின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் 9 திட்டங்களுக்குமான இறுதி ஒதுக்கீடானது 50 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்திய உயர் ஆணையரகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பினைத் தொடர்ந்து குறித்த 9 திட்டங்களுக்குமான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடானது 3 பில்லியன் இலங்கை ரூபாவினை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் வரையிலான சகல துறைகளையும் உள்ளடக்கிய வகையில் இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக இந்திய உயர் ஆணையரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# திருக்கேதீச்சரத்தின் 2,500 ஆண்டு பழைமையை அமெரிக்கத் தூதுவர் நிரூபித்தேயாகவேண்டும்

## இல்லையேல் மனிப்புக் கோரட்டும் என்கிறது தேசப்பற்றுள்ள இயக்கம்

கோகர்ண விகாரையை அழித்து அதன்மேலேயேதிருக்கேதீச்சரம்அமைக்கப்பட்டுள்ளது எனவும் ஆதலால், 'திருக்கேதீஸ்வரத்தை 2 ஆயிரத்து 500 ஆண்டுகள்பழமையான'ஆலயம்என்று அமெரிக்கத் தூதுவர் தனது ருவிற்றர் பதிவில்குறிப்பிட்டதற்காகஅவர்உடனடியாக மன்னிப்புக் கூறவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம். இது தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்ததாவது:

அமெரிக்க தூதுவர் உள்நாட்டு விவகாரங்களில் தொடர்ச்சியாகத் தலையிடுகிறார். உள்ளக விடயங்களில் தலையிடுவதை ஜூலி சுங் நிறுத்தவேண்டும். இதற்கு உரிய நடவடிக்கைகளை அயலுறவுத்துறை அமைச்சு மேற்கொள்ளவேண்டும்.

அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டதுபோல திருக்கேதீஸ்வரர் ஆலயம் அவர் குறிப்பிட்டதுபோல 2 ஆயிரத்து 500 ஆண்டு கால வரலாறு கொண்டது என்பதை அவர் ஆதாரபூர்வமாக நிரூபிக்கவேண்டும். முடியாவிட்டால் அவர் மன்னிப்பு கோர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# ரணில் பெரு முதலாளிகளின் காவலன் அவர் பொதுமக்களின் காவலன் அல்லர்

## ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி விமர்சனம்

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கமக்கள் நலன்களைக் காப்பவர் அல்லர். அவர் பெரு முதலாளிகளின் நலன்களைக் காப்பவர். அவர் முதலாளிகளின் சொத்துக்களுக்கும் முதலீடுகளுக்குமான பாதுகாவலரே தவிர, மக்கள் பாதுகாவலன் கிடையாது என்று தெரிவித்தார் ஜனநாயக சோசலிசக் கட்சியின் தலைவர் சி.க.செந்திவேல்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்க என்பவர் மக்களால் நாடாளுமன்றத்துக்கே தெரிவு செய்யப்படாத ஒருவர். அப்படிப்பட்டவர் ஆட்சிக்கு வந்திருக்கிற நிலைமை எமது நாட்டுக்கு ஏற்பட்ட அவலம். ரணில் விக்கிரமசிங்க அரசியலுக்குப் புதியவரும் அல்லர், இலங்கையிலே உள்ள மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்லப்போபவரும் அல்லர் என்பதை நாங்கள் கடந்த காலங்களிலேயே நன்கு உணர்ந்திருக்கிறோம்.

அவர் உண்மையிலே யாருடைய நலன்களை பாதுகாப்பதற்காக ஜனாதிபதியானார் என்பதை கடந்த ஒருவருடத்துக்கு மேலான அவரது ஆட்சியே தெளிவாகக் காட்டி நிற்கும்.

அவர், சொத்து சுகம் படைத்த பெரு முதலாளிகளுக்கும் அவர்களுடைய சொத்துக்களுக்கும்,

முதலீடுகளுக்கும்பாதுகாவலனேதவிர உழைக்கும் மக்களுக்கான பாதுகாவலன் கிடையாது. ரணில் விக்கிரமசிங்கவைப் பதவிக்குக்கொண்டுவந்ததன்பின்னால்மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட - பதவிகளில் இருந்து மக்களால் அடித்து விரட்டப்பட்ட - ராஜபக்ஷ குடும்பம் பதுங்கியிருக்கிறது. மிகமோசமாக மக்களை அடக்குமுறை செய்த ராஜபக்ஷ குடும்பம் தங்களிடமிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்தை வைத்து ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கினார்கள். எனவே அந்த ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் கொண்ட ஆட்சியாளர்களையும் ரணில் பாதுகாக்கிறார்.

ஜே.ஆர். ஜெயவர்தனவினுடைய உறவினரான ரணில் விக்கிரமசிங்க, அதே ஜே.ஆரினுடைய. பாதையில்தான் ஆட்சி செய்கிறார். கடந்த 44 ஆண்டுகாலமாக, 1978ஆம் ஆண்டு ஜே.ஆர். உருவாகிய -அரசமைப்புதான் இன்றைக்கும் நடைமுறையிலிருக்கிறது. அந்த அரசமைப்புத்தான் தேசிய பொருளாதாரத்தை இல்லாமல் செய்து, இந்த நாட்டின் ஜனநாயகத்தை இல்லாமல் செய்து, தனிநபர் சர்வதிகாரத்தை நிலை நிறுத்தி, அதன் கீழ் தமிழ் மக்களை மாத்திரமல்ல, சிங்கள, முஸ்லீம், மலையக மக்களையும் அடக்கி ஒடுக்கக் காரணமாக அமைந்தது.

இந்த நாட்டின் ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்கு எதிரான அடக்கு முறை ஆட்சியை இந்த அரசமைப்பின் கீழ் நடத்தி வந்திருக்கிறார்கள்.

எனவேதான் இந்த அரசமைப்பு தூக்கி வீசப்படவேண்டும் மக்கள் ஜனநாயகத்தை கொண்ட அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என நாங்கள் வலியுறுத்துக்கிறோம் - என்றார்.



# முன்னாள் எம்.பி. தர்மலிங்கத்தின் நினைவுதினம் நேற்று அனுஷ்டிப்பு

தமிழ் அரசுக் கட்சியின் மானிப்பாய்தொகுதிமுன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தின் 38ஆவது ஆண்டு நினைவஞ்சலி நேற்றுக் காலை 7.30 மணியளவில் தாவடியில் அமைந்துள்ள அவரது நினைவுத் தூபியடியில் இடம்பெற்றது.

நினைவுத் தூபிக்கு அரசியல் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் மலர் மாலை அணிவித்தும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர். தர்மலிங்கத்தின் புதல்வரும் புளொட் அமைப்பின் தலைவருமானநாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனும் நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்தார். தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, வடக்கு மாகாண அவைத் தலைவர்சி.வி.கே.சிவஞானம் ஆகியோரும் அஞ்சலிகளைச் செலுத்தினர். தர்மலிங்கம் ஞாபகார்த்த நினைவுப் பேருரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியல் துறைத்தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் ஆற்றினார்.

# சீனாவுக்குப் போட்டியாக இந்தியா இலங்கையில் செயற்படக்கூடாது

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் விமல், கம்மன்பில வலியுறுத்து

இலங்கை விவகாரத்தில் சீனாவுக்குப் போட்டியாக இந்தியா செயற்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ மற்றும் பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு எந்த நாட்டவர்களும் வந்து போகலாம். இலங்கை அரசின் அனுமதியுடன் எந்த நாட்டுக் கப்பலும் இங்கு வந்து தரித்து நிற்கலாம். இலங்கைக்கு எந்த நாடும் உதவிகளை வழங்கலாம். இந்தியா மாத்திரம்தான் இலங்கையின் தோழன் அல்லன்.

இலங்கை மீது இந்தியாவுக்கு எவ்வளவு அக்கறை உண்டோ அதேயளவு அக்கறை சீனாவுக்கும் உண்டு. ஏனெனில் சீனாவும் இலங்கைக்கு அவசர நிலைமைகளின்போது உதவி வழங்கும் முக்கியமான நாடாகும்.

இலங்கையைத்தனதுநிகழ்ச்சிநிரலுக்குள் கொண்டுவந்து வடக்கு, கிழக்கை முழுமையாக அபகரிக்கவே இந்தியா விரும்புகின்றது. இதற்கு நாம் ஒருபோதும் அனுமதி வழங்க மாட்டோம் - என்றார்.

# மனித உரிமை செயற்பாட்டாளர்களை உருவாக்க மல்லாவியில் கருத்தரங்கு

மனித உரிமை செயற்பாட்டாளர்களை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளில் முல்லைத்தீவில் இளைஞர்களுக்குக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட் டம், மல்லாவியில் பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரால் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இளைஞர்களுக்கு அடிப்படை மனித உரிமைகளும் இலங்கையில் உள்ள சட்டங்கள் எடுத்து விளக்கப்பட்டன.

கருத்தரங்கில் மனித உரிமைகள், அரசியல் யாப்புகள், அடிப்படை மனித உரிமைகளும்இலங்கையில் உள்ள சட்டங்களும், மனித உரிமைப் பரிந்துரைகள், ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் எனபன இளைஞர்களுக்கு தெளிவூட்டப்பட்டது. மல்லாவி, யோகபுரம், அனிஞ்சியன்குளம் ,துணுக்காய் பகுதிகளை சேர்ந்த இளைஞர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர். வளவாளராக சட்டத்தரணி நாகராஜ் மோகன் கலந்து கொண்டுதெளிவூட்டல்களை வழங்கினார்.

# பிரபாகரனை மட்டுமே சிங்களவர் கொன்றனர் ஏனைய தலைவர்களைத் தமிழரே கொன்றனர்

## பழிவாங்கும் உணர்வு இனத்தை நாசமாக்கும் என்கிறார் சித்தார்த்தன்

(ந.லோகதயாளன்.)

என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையில் தம்பி பிரபாகரனைத் தவிர வேறு எந்தவொரு தமிழ் அரசியல் தலைவரும் சிங்களப் படைகளால் அல்லது பொலிஸாரால் அல்லது சிங்களத் தரப்பால் கொல்லப்படவில்லை. அதற்காகப் பழிவாங்கும் உணர்வுடன் செயற்பட்டால் அது எமது இனத்தைத்தான் பாதிக்கும்.

இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 38 ஆம் ஆண்டு நினைவஞ்சலிநிகழ்வுநேற்று தாவடியில் இடம்பெற்ற உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழர் தரப்புக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள், மோதல்களால் பலரை நாங்கள்இழந்திருக்கின்றோம். குறிப்பாக என்னுடைய தந்தையாரைக் (வி.தர்மலிங்கம்) கூட நான் இழந்திருக்கின்றேன். இதனை யார் செய்தார்கள் என்பதும்எங்களில்பலருக்கும் தெரிந்திருக்கலாம்.

அதற்காகப்பழிவாங்கும் உணர்வோடு அல்லது அந்த நோக்கத்தோடு நாம் செயற்படவில்லை. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் என்ற அடிப்படையில் மன்னித்து ஒருமித்து ஓரணியாகப் பலமானசக்தியாகச்செயற்பட வேண்டும்.

இதைவிடுத்துப்பழிவாங்கும் நோக்கத்துடன் நாம் செயற்படுவோமாகஇருந்தால் எமது இனம் இன்னும் இன்னும் பின்னோக்கிச் சென்றுபெரும்பாதிப்பையே எதிர்நோக்க வேண்டியதாக இருக்கும்.

தமிழ் அரசியல் தலைவர்களில்எனதுதந்தையாரே முதலில் கொல்லப்பட்டிருக்கலாமென நான் நினைக் கின்றேன். அதன் பின்னரும்பல்வேறு சந்தர்ப்பங்களில் பல கொலைகள் இடம்பெற்றும்இருக்கின்றன.

என்னுடைய அறிவுக்கு எட்டியவகையில்தம்பிபிரபாகரனைத் தவிர வேறு எந்தவொருதமிழ் அரசியல் தலைவரும் சிங்களப் படைகளால்அல்லதுபொலிஸாரால் அல்லது சிங்களத் தரப்பால் கொல்லப்படவில்லை.

கொல்லப்பட்ட அத்தனை பேரும் குறிப்பாக இறுதியாகக் கொல்லப்பட்ட முன்னாள் எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் வரை இவர்களெல்லாம் தமிழ்த் தரப்புக்களாலே படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

இருந்தாலும் இதையே பேசிக் கொண்டு இருப்போமானால் இனத்தைக் கூறுபோடுவது மட்டுமல்ல பலவீனமான நிலைக்கே இட்டுச் செல்லும் ஆபத்தும் உள்ளது.

ஆகவே,நடந்தவைநடந்தவையாக இருக்கட்டும்; அதனை மன்னித்து அடுத்த கட்ட அரசியலை எடுத்துச் செல்ல வேண்டுமென்ற சிந்தனையில்நாம்செயற்பட்டு வருகின்றோம்.

மேலும்நடந்தவைகளை மீண்டும் மீட்டிக் கொண்டிராமல் அவற்றை மன்னித்து ஒற்றுமையை உருவாக்கினால் பலமான சமூகத்தை உருவாக்க முடியும். ஆகையால் இனத்தின் எதிர்காலம் கருதிமன்னித்துஓரணியாகச் செயற்பட வேண்டும்

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துங்கள் என்று நாங்கள் உட்பட சில தரப்புகள் இணைந்து வலியுறுத்தி வருகின்றோம். ஆனால், இதுதான் இறுதி முடிவாக நீங்கள் யாரும் சொல்லவில்லை.

13ஜஏன்கேட்கின்றோம் என்றால் இருப்பதையாவது முதலில் காப்பாற்றுங்கள் என்பதற்காகவேதான். உண்மையாகவே சமஷ்டி அடிப்படை தீர்வுதான் எங்கள்எல்லோராலும்கூடக் கேட்கப்படுகின்றது. அதனை அடைவதற்கு முன்னதாகஇருப்பதைநடைமுறைப் படுத்தக் கோருவதில் என்ன தவறு இருக்கின்றது.?

இந்த 13 ஆவது திருத்தத்தை வேண்டாம் என்றுவிட்டு இலங்கை அரசுக்கு நிலைமைகளைச் சாதகமாக்குவதால் எங்கள் இனத்துக்கு எந்தப் பயனும் இல்லை. ஏனெனில்13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்வதற்குச் சிங்களத் தரப்பில் பலர் அக்கறையாக உள்ளனர்.

தற்போதையநிலைமைகளைப் பொறுத்தவரையில் யுத்தம் முடிந்துவிட்டது. எல்லோரும் அமைதியாக உள்ளோம். ஒரேநாட்டுக்குள் வாழலாம்என்றசிந்தனையில் சிங்களத்தரப்பில்உள்ளவர்கள் இந்த 13 ஆவது திருத்தம் தேவையில்லை என்றும், அதனை நீக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

நாட்டில் மத, இன, மொழி ரீதியாகப் பாகுபாடு காட்டப்படுகின்றது. சிங்கள மதம், சிங்கள இனம், சிங்கள மொழி தான் முதன்மையானது என்ற சிந்தனையில்சிங்களபௌத்தமயமாக்கலைச் செய்து வருகின்றனர்.

கடந்த காலங்களைப் போல்மீண்டும்இனரீதியான பாகுபாடுகள், முரண்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுவருகின்றன. இந்த நிலைமைகள் தொடர அனுமதிக்கக்கூடாது. இதனைத்தடுத்துநிறுத்துவதே நாட்டுக்கு நல்லது - என்றார்.

# கனடா மோசடி சந்தேகநபருக்கு விளக்கமறியல்



கனடா அனுப்புவதாக கூறி வவுனியாவில் பண மோசடி செய்த நபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம், நாவற்குழியைச் சேர்ந்த சந்தேகநபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிவான் உத்தரவிட்டார்.

வவுனியாவின் பட்டக்காடு,திருநாவற்குளம், தவசிகுளம், மல்லாவி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 6 நபர்களிடம் கனடா அனுப்புவதாக கூறி சந்தேகநபர் பணத்தை வாங்கி மோசடி செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஒருவரிடம் இருந்து 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 6 பேரிடம் பணம்பெற்றிருந்ததுடன், ஒருவரிடம் 3 பவுண் சங்கிலி ஒன்றையும் பெற்றுள்ளார் என்றும் எனினும் எவரையும் கனடா அனுப்பாது மோசடி செய்தார் என்றும் பாதிக்கப்பட்டவர்கள் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்துள்ளனர். (100)

# கிணற்றில் வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

கிணற்றில் விழுந்து சிறுவன் உயிரிழந்த சம்பவம் எல்பிட்டியவில் இடம்பெற்றுள்ளது..

காலி மாவட்டம், எல்பிட்டிய, அனுருத்தகமவைச் சேர்ந்த ஒன்பது வயதுச் சிறுவனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தார்.

வேறு பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவனின் குடும்பத்தினர் வெள்ளிக்கிழமையே அந்த வீட்டுக்கு வாடகைக்குக் குடியிருக்க வந்திருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பெரியவர்கள் வீட்டு வேலைகளில் மும்முரமாக இருந்தபோது காணியில் உள்ள சிறிய கிணற்றில் சிறுவன் விழுந்திருப்பதாகப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# வாள், கோடரியுடன் வீதியில் சென்ற இளைஞர் கட்டுடையில் நேற்று கைது



கட்டுடையில் வாள் மற்றும் கோடரியுடன் வெள்ளிக்கிழமை இரவு இளைஞர் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று மானிப்பாய்பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற புலனாய்வு தகவலுக்கமைய மானிப்பாய் கட்டுடை பகுதிக்கு விரைந்த பொழுது வாள் மற்றும் கைக்கோடரியுடன் நடந்து சென்றுகொண்டிருந்த நபரே கைதுசெய்யப்பட்டவர் என்றும் அவர் தெரிவித்தார். சந்தேகநபருக்கு வயது 29.

வன்முறையில் ஈடுபடுவதற்காக அவர் சென்றுகொண்டிருந்தார் என்ற சந்தேகத்தில் அவரைக் கைது செய்துள்ள பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.09.2023இல் வெளியிடப்பெற்றது.